# திருச்சபையின்
# பத்து ஆதாரங்கள்

டாக்டர். பீட்டர் மாஸ்டர்ஸ்



# திருச்சபையின் பத்து ஆதாரங்கள்

டாக்டர். பீட்டர் மாஸ்டர்ஸ்

தமிழாக்கம்: பாஸ்டர். தாமஸ் எடிசன்

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. நமக்கு ஆவிக்குரிய கொள்கைகள் உண்டா? | - | 01 |
| 2. ஆராதிக்கும் சபை | - | 07 |
| 3. ஜெபிக்கும் சபை | - | 13 |
| 4. பரிசுத்தமாக்கப்பட்ட சபை | - | 19 |
| 5. உழைக்கும் சபை | - | 29 |
| 6. கற்றுக்கொள்ளும் சபை | - | 35 |
| 7. சுவிசேஷ சபை | - | 42 |
| 8. பிரிக்கப்பட்ட சபை | - | 48 |
| 9. தியாகமுள்ள சபை | - | 56 |
| 10. அன்புகூரும் சபை | - | 63 |
| 11. விசுவாசிக்கும் சபை | - | 72 |

# நமக்கு ஆவிக்குரிய கொள்கைகள் உண்டா?

"நீயோ என் போதகத்தையும் நடக்கையையும் நோக்கத்தையும் விசுவாசத்தையும் நீடிய சாந்தத்தையும் அன்பையும் பொறுமையையும்....... நீ கற்று நிச்சயித்துக்கொண்டவைகளில் நிலைத்திரு; அவைகளை இன்னாரிடத்தில் கற்றாய் என்று நீ அறிந்திருக்கிறதுமல்லாமல்" *(2 தீமோ 3:10,14).*

நம்முடைய சபையின் வளர்ச்சிக்கும், நம்முடைய ஐக்கியத்தை மேம்படுத்துவதற்கும், நாம் என்னென்ன திட்டங்களை வைத்திருக்கிறோம்? பொதுவாக நம்முடைய நடைமுறை வாழ்க்கையில், அது வியாபாரமாகவோ, அரசியல் ரீதியாகவோ, அது எந்தப் பணியாக இருந்தாலும், அப்பணிகளைச் சிறப்பிப்பதற்கும், மேம்படுத்துவதற்கும், கொள்கைகள் அல்லது நோக்கங்கள் அடங்கிய தலைமைத்துவம் அவசியமாக இருக்கிறது. குறிப்பிட்டுச் சொல்லப்போனால், சபைக்கடுத்த காரியங்களில், ஊழியப்பணிகளில், நோக்கங்களும், கொள்கைகளும் கொண்ட செயல்பாடுகள், வேதப்பூர்வமற்ற, ஒத்துவராத காரியம் என்று எண்ணி சில நேரங்களில் தள்ளி வைக்கப்படுகிறது. ஒருவேளை இந்த உலகப் பிரகாரமான, இயந்திரமயமான விதங்களில் சபை வளர்ச்சி போய்க்கொண்டிருக்கிற வேளையில், கொள்கைகளற்ற செயல்பாடுகள், பார்வைக்கு நன்மையானதாக, சிறப்பானதாக தோன்றலாம். இருந்த போதிலும், காற்று அடிக்கிற திசைக்கு ஏற்றார்போல் கப்பலை நகற்றுவது போல் போதகர்களும், சபைகளும் சூழ்நிலைகளுக்கு ஏற்றதுபோல மாற்றிக்கொண்டு இருக்க முடியாது. நாம் வெறும் பிரசங்கம் மாத்திரம்

செய்துவிட்டு, பின்பு எல்லாம் வந்துவிடும், காரியம் எல்லாம் கைகூடிவிடும் என்று நம்பிக்கொண்டிருக்கக்கூடாது. உண்மையாகச் சொல்லப்போனால், நம்முடைய சபையின் வளர்ச்சிக்கும், முதிர்ச்சிக்கும், கொள்கைகளும் நோக்கங்களும் கொண்ட சபையாக நாம் இருக்க வேண்டும். இதைக்குறித்தும், இதன் அவசியத்தைக் குறித்தும் அப்போஸ்தலனாகிய பவுல் பலவிதங்களில் வெளிப்படுத்தியிருப்பதை நாம் காணலாம். நாம் சபையின் போதகர்களாய் அல்லது சபையின் அலுவலர்களாய் இருப்போமானால், நம்முடைய சபையை எந்த விதத்தில் சிறப்பிக்கவும், மேம்படுத்தப்பட வேண்டும் என்று விருப்பப்படுகிறோமோ, அந்த விதத்தில் அமைப்பதற்கு சரியான திட்டமான கொள்கைகளும் நோக்கங்களும் உடையவர்களாய் இருக்கிறோமா? அவ்விதமான நம்முடைய நோக்கங்களுக்கு ஒரு திட்டமோ அல்லது வடிவமைப்போ கொண்டிருக்கிறோமா? அந்தவிதமான நோக்கங்களைச் செயலாக்கத்தில் கொண்டுவருவதில் நாம் முன்னேறிச் செல்லுகிறோமா?

சபையின் அங்கத்தினர் நம்மைப் பார்த்து, "போதகரே, உங்களுடைய திட்டங்களும் நோக்கங்களும் என்ன?" என்று கேட்பார்களேயாகில், நம்முடைய சபையின் வளர்ச்சிக்கும், முதிர்ச்சிக்கும் தேவையான விருப்பங்களைப் பட்டியலிட்டுச் சொல்லுகிற நிலையில் இருக்கிறோமா? இவ்விதமாக சொல்லுகிறவர்களாய் இருப்போம் என்றால், அவை ஏன் நம்முடைய சபைக்கு சரியானதாயும், தேவையானதாயும், ஆவிக்குரிய காரியங்களில் முதன்மையானதாயும் இருக்கிறது என்று சரியாக விளக்கிக்காட்டிச் சொல்லக்கூடிய நிலையில் இருக்கிறோமா? அல்லது மற்ற மனுஷர்களைப் போல "ஓ, எங்கள் சபை ஆவிக்குரிய காரியத்தையும், பரிசுத்தத்தையும், சுவிசேஷத்தையும் மேம்படுத்துவதற்காகவே இருக்கிறது" என்று மேலோட்டமான விதத்திலும், ஒரே வார்த்தையில் முடித்துக் கொள்ளுகிறவர்களாய் இருக்கிறோமா?

அப்போஸ்தலனாகிய பவுல், திட்டமான தெளிவான கொள்கைகளையும், நோக்கங்களையும் வைத்திருந்தார். தீமோத்தேயும் கூட அது என்ன என்று தெளிவாக அறிந்திருந்தார். பின்வரும் வார்த்தையானது, தீமோத்தேயுவுக்கு பவுல் கொடுக்கிற தெளிவான வார்த்தையாகும், "நீயோ என் போதகத்தையும், நடக்கையையும், நோக்கத்தையும்" என்று கூறுகிறார். இதில் நோக்கம் என்ற பதம் கிரேக்க மொழியில் "ப்ரோதீஸிஸ்" *(Prothesis)* என்று சொல்லப்படுகிறது. அதாவது திட்டம், வடிவமைப்பு, நோக்கம், கொள்கை அல்லது விருப்பங்கள் என்ற தெளிவான அர்த்தத்தோடு காண்பிக்கப்பட்டிருக்கிறது. இவ்வசனத்தின்படியாக, பவுலினுடைய கொள்கைகளும், நோக்கங்களும், தன் வாழ்க்கையின் நடத்தைக்கும் ஊழியத்திற்குமாக இருந்தது. தன் மாணாக்கனாகிய தீமோத்தேயுவும் இதை முழுமையாக அறிந்திருந்தான்.

பவுல் தன்னுடைய வாழ்க்கையில் சபைக்காக வைத்திருந்த கொள்கைகளும், நோக்கங்களும் இரகசியமாக அல்லது பிரத்தியேகமாக தன்னுடையது என்று சொல்லி தன்னுடைய மனதில் பூட்டி வைத்தவராய் அல்ல. எப்படி ஒரு பயிற்சியாளர், பயிற்சிக்கு அடுத்த காரியங்களைத் தன்னுடைய மாணாக்கர்களுக்கு கற்றுக்கொடுப்பாரோ, அவ்விதமாகவே திறமைவாய்ந்தவரும், ஞானவானாகவும், படைப்பாளியுமாகிய பவுல், தான் தேவனிடத்திலிருந்து பெற்றவராய், பெற்ற அனைத்துக் காரியங்களையும், தன் சக ஊழியர்களுக்கு தெளிவாக வெளிப்படுத்தினார்.

மற்ற மனுஷர்களைப் போல் அல்லாமல் தீமோத்தேயு, அப்போஸ்தலனாகிய பவுல் வகுத்துக் கொடுத்த திட்டங்களையும், நோக்கங்களையும், கொள்கைகளையும், ஏற்றுக் கொண்டவராய், கருத்தாகவும், நிதானமாகவும் அதை ஆராய்ந்து பார்த்தது மாத்திரமல்ல, இது எல்லாக் காலத்திற்கும்

பொருந்தக்கூடியதும், தேவனால் வெளிப்படுத்தப்பட்டதும், சபைக்கென்று வடிவமைக்கப்பட்டதுமாக இருக்கிறது என்று சொல்லி உணர்ந்தவராய்க் காணப்பட்டார். தீமோத்தேயு, பவுலை தன் வாழ்க்கையில் ஒரு முன் மாதிரியாக வைத்திருந்தான். அவ்விதமாகவே, சபைகளும், போதகர்களும் வேறு எவரையும், எவ்விதத்தையும் எடுத்துக்காட்டாக வைக்காமல் இந்த அப்போஸ்தல எடுத்துக்காட்டே நமக்கு அவசியமானதாகவும், கட்டாயமானதாகவும் இருக்கிறது. ஆகவே, நம்முடைய சபையின் வளர்ச்சிக்கும், அதைக் கட்டுவதற்குண்டான பணிகளில் வெற்றிகளைக் காண்பதற்கும் இதை நாம் அதிகமாக சார்ந்து கொள்ளலாம். “நீ கற்று நிச்சயித்துக்கொண்டவைகளில் நிலைத்திரு” என்று பவுல் கட்டளையிடுகிறார்.

ஆம்! தீமோத்தேயு முழுமையாக தாயாரிக்கப்பட்ட, ஆயத்தமாக்கப்பட்ட கொள்கைகளை, நோக்கங்களை பெற்றுக் கொள்ளும்படியான நிலையில் காணப்பட்டான். இப்புத்தகத்தின் ஆசிரியருடைய சபை ஊழியத்தின் ஆரம்ப காலத்தில், முப்பது வருடங்களுக்கு முன்பாக, செயலாக்கத்தில் திறமை வாய்ந்த டீக்கன் ஒருவர் “நம்முடைய போதகர் எடுக்கும் முயற்சிகளில், அவருடைய வழியில், அவருடைய திட்டங்கள், நோக்கங்கள், ஒருவேளை அவருக்கு முன்பு பணிபுரிந்து சென்ற போதகரிடத்திலிருந்து வேறுபாடுகள் அல்லது மாறுபாடுகள் காணப்பட்டாலும் எந்தவித தடங்கல்களும், தடைகளும் இருக்கக்கூடாது என்று குறிப்பிட்டார். எல்லாரும் எதிர்பார்த்த வண்ணமாக அவரும், ஒரு புதிய மனிதர், ஒரு முழுமையான, வித்தியாசமான அணுகுமுறையைக் கொண்டிருப்பார்” என்று உணர்ந்திருந்தார். மேலும் அவர், எந்த இரண்டு போதகர்களும் ஒரே எண்ணத்தை கொண்டிருக்கமாட்டார்கள் என்றும், ஊழியங்களில் வித்தியாசமான விதங்களில் நடத்திக்கொண்டு போகிறது இருக்கும் என்ற எண்ணத்தையும் கொண்டிருந்தார்.

*இவ்விதமான அணுகுமுறை மிக உதவியாகவும், உற்சாகமூட்டுகிறதாகவும் இருந்தது. ஆனால் அதே நேரத்தில், போதகர்களுக்கு மத்தியில் வித்தியாசங்கள் இருக்க வேண்டுமா? மருத்துவத் துறையிலும் அல்லது அதைச் சார்ந்த அறுவை சிகிச்சை பணியிலும் வித்தியாசங்களை நாம் எதிர்பார்க்கிறோமா? இவ்விதமாக மருத்துவத் துறையில் ஈடுபடுகிற ஒவ்வொரு மருத்துவரும் தங்களைத் தாங்களே தன்னிச்சையாக உயர்ந்த அணுகுமுறைகளைத் தங்களுக்குச் சொந்தமான வழிமுறைகளை, உத்திகளைக் கையாண்டு செயல்படுகிறவர்களை நாம் ஏற்றுக் கொள்ளுகிறவர்களாய் இருக்கிறோமா? அல்லது இப்பொழுது நடைமுறையில் உள்ள எல்லோரும் ஏற்றுக்கொள்ளுகிற அணுகுமுறையான அறிவும், அனுபவமும் சேர்ந்து உருவாக்கப்படுகின்ற சிறப்பான நோய் நீக்கும் முறைகளை நம்பி நாம் ஏற்றுக்கொள்ளுகிறோமா? "வெட்கப்படாத ஊழியக்காரன்" ஊழியத்தைப் பொறுத்த வரையில், எல்லோருக்கும் பொதுவாக ஒரே ஒரு கொள்கை, நோக்கத்தை கொண்டிருக்கிறவனாய் இருக்கவேண்டும்.*

*நிலையான, வளருகிற சபையைக் கட்டுவதற்கு தெளிவற்ற தன்மை ஒருபோதும் உதவாது. மேலும், சபையின் வாழ்க்கைக்குத் தூண்களாக காணப்படுகின்ற அவசியமானவைகளில் ஒன்று அல்லது இரண்டை மாத்திரம் அதாவது மெய்யான உபதேசம் அல்லது உணர்வுள்ள பிரசங்கங்கம் இவற்றை மாத்திரம் வலியுறுத்துவது பிரயோஜனமற்றது. ஏனென்றால், சரியான கொள்கை என்பது வேதப்பூர்வமான குறிக்கோள்கள் ஒருங்கே அமைந்ததாயும், அவை அனைத்தும் அதிலே தொடர்ந்து தங்கியிருக்கிறதாயும் இருக்கவேண்டும். பவுல், தெளிவான, முரண்பாடற்ற, பின்பற்றத்தக்கதான குறிக்கோள்களை வைத்திருந்தார். இதுவே பின்பற்றக்கூடியதும், போதிக்கவேண்டியதுமான ஒரு எடுத்துக்காட்டாய் அனைவருக்கும் இருக்கிறது. "என்னைப் பின்பற்றுகிறவர்களாகுங்கள்" (1 கொரி 4:16, 11:1, பிலி 3:17). இது ஒருக்காலமும் மாற்றப்படக் கூடாது.*

பின்வரும் பத்துக் கொள்கைகள் அனைத்தும், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்கும் அல்லது அப்போஸ்தலனாகிய பவுலுக்கும் உரியதாய் இருக்கிறது. இந்த உன்னதக் குறிக்கோள்களை, கொள்கைகளைப் படிக்கிற ஒவ்வொருவருக்கும், அநேக சபைகளுக்கும், இது ஆசீர்வாதமாயும், பேருதவியாகவும், தேவனுடைய கிருபையால் இருப்பதாக.

# 1. ஆராதிக்கும் சபை

சபையாகக் கூடிவருகிற ஒவ்வொரு சபையும் மெய்யான ஆராதிக்கும் சபையாக இருக்கவேண்டும். இதுவே சபை நிறுவுகிறவர்களுக்கும், போதகர்களுக்கும், தலைமை பொறுப்பில் இருப்பவர்களுக்கும் முக்கிய மேலான குறிக்கோளாய் இருக்கவேண்டும். ஆராதனைக்குரிய மொழி நடையானது பவுலினுடைய எல்லா நிருபங்களிலும் ஊடுருவிப் பரவியிருப்பதை நாம் காணலாம். மேலும் 1கொரி 14 ஆம் அதிகாரத்தில் பவுல், தேவனுடைய பிள்ளைகள் ஆராதனையில் எப்படியாக நடக்க வேண்டும் என்று நடைமுறைக்கு சாத்தியமான, அவசியமான போதனைகளைத் தெளிவாகக் கற்பிப்பதை புதிய ஏற்பாட்டில் காணலாம். ஆம்! நாம் ஆராதிக்கிற சபைகளைக் கட்ட வேண்டும்.

ஆனால், ஆராதனை என்றால் என்ன? சபைகளில் ஆராதனையைக் குறித்ததான தவறான போக்கு இன்றைக்கு இருப்பதைப் போல் என்றைக்கும் இருந்ததில்லை.

முதலாவதாக, இது வெறும் மகிழ்ச்சியூட்டுகிற ஆராதனையாக இருக்கிறது. தேவனுடைய மகிழ்ச்சி, விருப்பம் போன்றவைகள் முதலாவதாக வைக்க வேண்டிய இடத்தில், விசுவாசிகளினுடைய இன்பம் மகிழ்ச்சிக்கு முதலாவது இடமாக முக்கிய பங்கு வகிக்கிறது.

இரண்டாவதாக, அது உலகப்பிரகாரமான ஆராதனையாக இருக்கிறது. தற்போதைய இசை ரசனைக்கு ஏற்றாற்போல் இவ்வுலகத்தில் காணப்படுகிற அனைத்து இசைக்கருவிகளும், நடனங்களும், கேளிக்கைகளும், பாட்டுகளும் ஆராதனையில் இடம்பெற்று, உலகமயமான

போக்கைக் கடைபிடிக்கிற வேளையில், "உலக சிநேகம் தேவனுக்கு விரோதமான பகை" என்று ஆண்டவர் சொல்லுவதை நினைவில் வைத்துக் கொள்ளவேண்டும்.

மூன்றாவதாக, தேவன் தம்முடைய ஆலயத்தில் கனமும், கெம்பீரமும், ஒழுக்கமும், கிரமமும், மகிமையும் தங்கியிருப்பதையே எதிர்பார்க்கிறவராய் இருக்கிறார். ஆனால், இன்றைக்கு முறையற்ற, ஒழுங்கற்ற ஆராதனையாக அதாவது ஏனோதானோ என்றும், பொழுதுபோக்கான நகைச்சுவை காரியங்களைப் பேசிக்கொண்டும், ஓய்வு எடுக்கிற அறையில் இருப்பதுபோல இன்றைய ஆராதனையின் நடைமுறை மாறியிருக்கிறது.

நான்காவதாக, மற்றவர்களை ஈர்க்கும்படியான ஆராதனை. அதாவது இசைகளும், இசைக்கருவிகளும், நடனங்களும், பாட்டுகளும் ஆராதனைக்குரிய சரியான வழிமுறைகள் என்றும், இதனாலும், இதன் மூலமாகவும் தேவன் ஆராதிக்கப்படுகிறார் என்கிற மனநிலை இன்றைக்கு நிலவுகிற வேளையில், "தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுதுகொள்ளவேண்டும்"(யோவா 4:24) என்ற ஆண்டவருடைய வார்த்தையை நினைவில் வைத்துக் கொள்ளவேண்டும்.

ஐந்தாவதாக, இவ்விதமான ஆராதனையில் மக்கள் மிகுந்த உணர்ச்சி வசப்பட்டவர்களாய், எதையோ சாதிக்கிற மாதிரி இந்த உலகத்திலேயே இல்லாததுபோல தங்களையே மெய்மறந்து போனவர்களாய், கடவுளோடு இனம் புரியாத, இரகசியமான தொடர்பு கொண்டவர்களைப் போல தங்களைக் காட்டிக் கொள்ளுகிறார்கள். ஆனால் வேதம் "கருத்தோடு ஜெபம் பண்ணவும், பாடவும் வேண்டும்" என்று (1கொரி 14) கூறியிருப்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

ஆறாவதாக, ஆழமற்ற ஆராதனை. இவ்வாராாதைனையில் அர்த்தமுள்ள ஞானப்பாட்டுகளை குறைத்துப்போட்டு, ஆழமில்லாத, சத்துவமற்ற எளிய பாடல் வரிகளைக் கொண்ட பாடல்களே அதிகம் ஆக்கிரமித்து கொண்ட ஆராதனையாய் இருக்கிறது. ஆனால் சங்கீதப்பாட்டுகள், பாமாலைகள், ஆராதனையின் பாடல்களில் எடுத்துக்காட்டாக விளங்குகிறதாய் முழுமையாக, திடமாக தேவனுடைய மகிமையை உயர்த்திக்காட்டுகிற ஆழமான அர்த்தமுள்ள கருத்துக்களைக் கொண்டதாக இருக்கிறது என்பதை அறிந்துகொள்ளுவது அதிமுக்கியமானது.

கடந்த நாற்பது ஆண்டுகளில், தவறான போக்குகளும், கருத்தற்ற, ஒழுங்கற்ற போக்குகளும் கொண்ட ஆராதனை பரவியிருப்பதை நாம் காணலாம். அவைகள் சபைகளை அழித்து தேவனை அவமரியாதை செய்கிறதினால், நம்முடைய சபையாருக்கு தேவனுக்கு மகிமையாகக் காணப்படுகின்ற ஆராதனையைக் கற்றுக் கொடுக்க வேண்டும். எது உண்மையான ஆராதனை என்று தேவ வார்த்தையில் இருக்கிறது. சில ஆண்டுகள் முன்பு வரை, எல்லா புரோட்டஸ்டண்டுகளுக்கும் ஆராதனை என்பது அறிவுப்பூர்வமான அடிப்படையான உண்மையாய் இருந்தது. நமது இரட்சகர் சொல்லுகிற வார்த்தை “உண்மையோடும்” என்கிற பதத்தின் அர்த்தமாவது, பகுத்தறியும் தன்மையையும், ஒழுக்கமும், நேர்மையும் கொண்ட மனதிலிருந்து வரும் புத்திசாலித்தனமான உணர்வுகளைக் கொண்டிருப்பதில் தான் உண்மையான ஆராதனை அடங்கியிருக்கிறது என்பதாகும். “ஆவியோடும்” என்ற வார்த்தைக்கு பொருள் என்னவென்றால், சரீரப்பிரகாரமான சடங்குகளும், சம்பிரதாயங்களும் அல்லது உடல் அசைவுகளும் கொண்டு அமையாத ஆராதனையையே குறிக்கிறது.

இன்றைய சூழ்நிலையில், பொதுவாக ஆராதனைகள் ஆண்டவரால் வடிவமைக்கப்பட்ட உன்னதமான சட்டதிட்டங்களிலிருந்தும், வழிமுறைகளிலிருந்தும் விழுந்துவிட்டது. ஆம்! நிச்சயமாக, அவ்விதமான போக்கு உண்மையான ஆராதனையே அல்ல, மாறாக, தங்களை உற்சாகப்படுத்திக் கொள்ளும் விதத்தில், உணர்ச்சிகளும், பொழுதுபோக்குகளும் கலந்த ஆராதனையாகும். ஆராதனை என்பது எவ்விதம் இருக்கவேண்டும் என்று தம்முடைய வார்த்தையில் கொடுத்திருக்கிறார். அவ்விதம் ஆராதிப்பதே புத்திசாலித்தனமானது. அது நிச்சயமாக, பகுத்தறியும் ஆற்றலைக் கொண்ட மனதை தூக்கியெறிந்து விட்டு வினோதமாக தங்களை மறந்துபோன அனுபவங்களைக் கொண்டவையாக இருக்காது.

உண்மையான ஆராதனைகளை நடத்துகிற போதகமார்கள், தங்களுடைய சபை ஆராதனைகளிலும், ஜெபத்திலும், பாட்டுகளிலும், பிரசங்கத்திலும், வேதரீதியான ஆராதனை ஒழுங்குகளைக் கடைப்பிடிக்கிறோமா என்று நிச்சயமுள்ளவர்களாய், கவனமுள்ளவர்களாய் இருக்க வேண்டும். இவ்விதமான ஆராதனை கனமும், பயபக்தியும், மரியாதையும் துதியும் கொண்டதாயிருக்கிறது. ஸ்தோத்தரிப்பதிலும், மனந்திரும்புவதிலும், மகிழ்ச்சியிலும், சத்தியத்தில் நிலைத்திருப்பதிலும், கற்றுக்கொள்ளுவதிலும், ஜெபத்திலும் மற்றும் கீழ்படிதலில் உள்ள ஒப்புக்கொடுத்தலிலுமே அடங்கியிருக்கிறது. போதகமார்கள், ஊழியர்கள் போலியான தோற்றத்தைக் காண்பித்துக் கொள்ளுவதையும், ஏனோதானோவென்று கருத்தற்றவர்களாய் இருப்பதையும், மற்ற இப்படியான போக்குகள் அனைத்தையும் தூக்கியெறிந்துவிட்டு, நான் சிறுகவும், அவர் பெருகவும் வேண்டும் என்ற மனப்பான்மை உள்ளவர்களாக இருக்கவேண்டும். ஆராதனை வேளையில்

ராஜாதி ராஜாவாகிய கர்த்தர் தாமே நம்மத்தியில் வாசம்பண்ணுகிறார் என்ற உணர்வுள்ளவர்களாய் நடந்து கொள்ளவேண்டும்.

இந்த சிறந்த ஆராதனை என்பது, ஆச்சரியத்தையும், பயபக்தியையும், சிறப்புரிமையையும் கொண்ட வேளையாக இருக்க வேண்டும். நிச்சயமாக, இவ்விதமான வேளையில், மகிழ்ச்சி மேலான சிறப்பு அம்சமாகக் காணப்படும். ஆனால் அதே மகிழ்ச்சி பயபக்தி இல்லாதபடி, ஆழமான ஒப்புக்கொடுத்தல் இல்லாமல், உண்மையான மனந்திரும்புதல் இல்லாதபடி இருக்குமானால் அந்த மகிழ்ச்சி பொருத்தமற்றதாகவும், அர்த்தமற்றதாகவும் மாறிவிடும். ஆராதனை நடத்துகிறவர், வீண் பேச்சு பேசுகிறவராயும், கருத்தற்றவராயும், கேலியாகப் பேசுகிறவராகவும் இருப்பாரே என்றால், அது தேவனுடைய கனத்துக்குரிய பிரசன்னத்தை இழக்கவும் செய்துவிடுகிறது. ஆராதிப்பவர்கள் கூட, தேவையற்ற தங்கள் சொந்த காரியங்களைக் குறித்து பேசிக்கொண்டு இருப்பதும், அரட்டை அடித்துக்கொண்டு இருப்பதை புறக்கணித்துவிட்டு, ஒருவருக்கொருவர், மரியாதையுடன் கூடிய வாழ்த்துக்களைக் கூறிக் கொள்ளுகிறவர்களாகவும், முக்கியமான கூட்டங்களுக்குரிய எளிமையான அறிவிப்புகளைப் பெற்றுக் கொள்ளுகிறவர்களாகவும் இருக்கவேண்டும். மனிதர்கள் மத்தியில், இலகுவான, சீரற்ற, வழக்கமான முறையில் அனுசரியாத பழக்கவழக்கங்கள் பொதுவாக இருந்தாலும், சர்வ வல்லமையும், நித்திய மகிமையும் தங்கிய தேவனை ஆராதிப்பதில் அவைகள் எவ்விதத்திலும் இருக்கக்கூடாது.

நாம் சிந்தனைப் பூர்வமாக, ஆராதிக்கிற சபைகளைக் கட்டுவோம் என்றால், மக்கள் தாழ்மையில் பலப்படுத்தப்பட்டவர்களாய், ஆவிக்குரிய மகிழ்ச்சியில்

உயர்த்தப்பட்டவர்களாய், தங்கள் பார்வையில் ஆழம் கொண்டவர்களாய் காணப்படுவார்கள். அதேவேளையில், நிச்சயமாக எங்கே முறையற்ற ஆராதனை இருக்கிறதோ, அங்கே தாழ்மையற்ற, பயபக்தியற்ற, பெருமையான கிறிஸ்தவர்களைத் தான் உருவாக்கும்.

அவ்வண்ணமே, பெருமையான ஆராதனை காயீனுடைய காணிக்கைப் போன்றது, ஆராதிப்பவர் எதையாவது செய்துவிட்டால், அதிலே பெருமைக் கொள்ளுவது. மெய் மறந்துபோன நிலையில் ஆராதிக்கிற ஆராதனை, ஆவிக்குரிய விதத்தில் எதையோ நிறைவேற்றிவிட்ட நினைப்பினால் பெருமையை உருவாக்குகிறது. மற்றும் ஆனந்தமயமான ஆராதனை, இது சுய நலத்தையும், சுயமுக்கியத்துவத்தையும் தூண்டுகிறது. அதாவது, ஆராதிக்கிறவர் எதைப் பெற்று அனுபவிக்க வேண்டும் என்று விரும்புகிறாரோ அதைப் பெறுவது.

மெய்யான ஆராதனையில்தான் தேவன் மகிழ்ச்சியடைகிறார். அதே நேரத்தில் ஆழமாய்ப் புரிந்துகொண்டும், நம்பிக்கை கொண்டும், தேவனிடத்தில் தங்களையே முழுவதுமாய் அர்பணிக்கப்பட்ட தாழ்மையுள்ள, சுயநலமற்ற கிறிஸ்துவர்களை உருவாக்குகிறது. மற்றொரு விதத்தில் சொல்லப்போனால், மெய்யான ஆராதனையானது நம்மைப் பரிசுத்தமாக்குகிறது.ஒவ்வொரு போதகரும், தலைமைப் பொறுப்பில் இருப்பவர்களும், உண்மையாகவே ஆராதிக்கிற சபையைக் கட்டவேண்டும் என்ற மேலான நோக்கம் கொண்டவர்களாக இருக்கவேண்டும்.

# 2. ஜெபிக்கும் சபை

ஜெபிக்கும் சபையைக் கட்டுவதே மற்றொரு குறிக்கோளாக இருக்கிறது. அவ்விதமான ஜெபிக்கும் சபையில் எந்தவிதமான கேள்விக்கு இடம் இல்லாதபடி அடிப்படையான, அஸ்திபாரமாய் காணப்படுவது உண்மையான ஜெபக் கூடுகையே ஆகும். பவுல் நமக்கு மறுபடியும் மறுபடியுமாக சொல்லுவது என்னவென்றால், அவர் உழைத்த சபைகளுக்காக இடைவிடாமல் ஜெபித்தார் என்றும், எனக்காக ஜெபம் பண்ணிக்கொள்ளுங்கள் என்று அவர்களிடத்தில் வேண்டிக்கொள்ளுவதையும் நாம் பார்க்கலாம். ஆனால் நம்முடைய ஜெபக் கூடுகை நடைமுறை ரீதியில் எவ்விதமாக இருக்கிறது?

நம்முடைய புதிய ஏற்பாட்டில், ஜெபத்திற்காக ஒரு தனித்தன்மை வாய்ந்த கூட்டம் ஒரு விசேஷித்த ஆதாரத்தைப் பெற்றிருக்கிறது. முக்கியமாக, அப்போஸ்தலர் நடபடிகள் மற்றும் 1, 4, 12 ம் அதிகாரங்களில் தனித்தன்மையான ஜெபக் கூடுகைகள் விளக்கப்பட்டிருப்பதை நாம் பார்க்கலாம். இவைகள், முக்கியமான தேவைகளுக்காக, பரலோகத்தை எட்டும் வண்ணமாக கூட்டப்பட்ட ஜெபிக்கிற கூடுகையாக இருந்தது, பிரசங்க கூடுகையாக அல்ல. மத்தேயு 18-ல் நமது ஆண்டவரால் ஜெபக் கூட்டத்திற்கென்று ஒரு விசேஷித்த வாக்குத்தத்தம் கொடுக்கப்பட்டிருக்கிறது. “உங்களில் இரண்டு பேர் தாங்கள் வேண்டிக்கொள்ளப்போகிற எந்தக் காரியத்தைக் குறித்தாகிலும் பூமியிலே ஒருமனப்பட்டிருந்தால், பரலோகத்தில் இருக்கிற என் பிதாவினால் அது அவர்களுக்கு உண்டாகும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்” (மத் 18:19).

இந்த வாக்குத்தத்தம் ஜெபக் கூடுகைகளை எடுத்துக் காட்டுகிறதாகவும், வல்லமையாக உற்சாகமூட்டுகிறதாகவும் இருக்கிறது. ஸ்பர்ஜன் மத்தேயு 21:22 -ல் கூறப்பட்டுள்ள வாக்குத்தத்தத்த வசனத்தில் 'எவைகளை, அவைகளை' என்ற வார்த்தையின் பதமானது முக்கியமானதாக இருக்கிறது என்று குறிப்பிடுகிறார். நிச்சயமாய், இவ்விதமான கூடுகைகள், தேவனைத் துதிப்பதும், அவருடைய உன்னத தன்மையையும், அன்பையும் பிரதிபலிக்கிறது மாத்திரமல்ல, சபையின் முக்கிமான பாரங்களுக்காக, விசேஷித்த ஊழியங்களுக்காக ஜெபிப்பதே அதனுடைய மேலான நோக்கமாக இருக்கிறது. ஸ்பர்ஜன் வலியுறுத்துவது போல, அவைகள் கேட்கிற கூடுகையாக இருக்கவேண்டும். புதிய ஏற்பாடு முழுவதும், இவ்விதமாக செய்யும்படி நாம் கட்டளையிடப்பட்டிருக்கிறோம்.

ஜெபத்தில் "ஒருமனப்பட்டு" விசுவாசிகள் ஜெபிக்கும்பொழுது, தேவன் விசேஷித்த விதத்தில் ஆசீர்வதிக்கிறார் என்று நமது ஆண்டவர் மத்தேயு 18 -ம் அதிகாரத்தில் சொல்லுகிறார். கிரேக்கப் பதத்தில் '*Sound together*' என்று சொல்லப்படுகிறது. அதாவது மற்றவர்கள் கேட்கும் விதத்தில் குரலை உயர்த்தி ஜெபிக்கிறவர்களாகவும், மற்றவர்கள் அமைதியாக ஜெபத்தில் தங்கியிருப்பவர்களாகவும் இருக்க வேண்டும் என்று கூறப்படுகிறது. அவ்விதமாக தொடர்ந்து ஒருவர் மாற்றி ஒருவர் செயல்படவேண்டும். "ஒருமனப்பட்டு" என்ற வார்த்தை மேலும் எதை வலியுறுத்துகிறது என்றால், எல்லாரும் ஒரே பொதுவான நோக்கத்தைக் கொண்டு பாரங்களுக்காக ஜெபிக்கிறதைக் குறிக்கிறது. ஜெபவேளை என்பது முக்கியமாக அனைவரும் ஜெபிக்க வேண்டிய பாரங்களை தங்கள் இருதயங்களில் கொண்டிருக்கிற வேளையாய் இருக்கிறது.

பின்வரும் காரியங்கள், ஜெபக் கூட்டத்திற்கு அவசியமான நடைமுறைக் குறிப்புகளாக நாம் பார்க்கலாம்.

*i.* வேத ஆராய்ச்சி கூட்டத்தோடு ஜெபக் கூட்டத்தை இணைக்காமல், அதற்கென்று பிரத்யேகமாக மாலை நேரங்களில் இருப்பது நலமாக இருக்கும்.

*ii.* எந்த அளவுக்கு விசுவாசிகள் கூட்டமாக கலந்து கொள்ளுகிறார்களோ, அந்த அளவுக்கு கலந்து கொள்ளுவது மிக அவசியம். அவ்வாறு கலந்து கொள்ளுகிறவர்கள், மிகுந்த பொறுப்புணர்வோடு மற்றவர்கள் கேட்கும் வண்ணம் தெளிவான சத்தத்தோடு ஜெபம்பண்ண வேண்டும்.

*iii.* ஜெபக்கூட்டம் ஆரம்பிப்பதற்கு முன்பாக, ஊழியங்களைக் குறித்தும், விசேஷித்த மற்றும் வழக்கமான பாரங்கள் இருக்குமாயின் கட்டாயமாக வாசிக்கப்பட வேண்டும்.

*iv.* எல்லாரும் ஜெபத்தில் கலந்துகொள்ளும் வண்ணமாக, ஜெபிப்பவர்கள், மூன்று பாரங்களுக்கு மிகையாகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். ஜெபக்கூட்டம் 40 அல்லது 45 நிமிடங்கள் மாத்திரம் இருக்குமாயின், ஜெபிப்பவர்கள், மிகக் குறைவான நேரம் மாத்திரமே எடுத்துக் கொள்ளவேண்டும். 100 பேர் அடங்கிய பெரிய ஜெபக் கூட்டத்தில் ஒருவர் மூன்று நிமிடத்திற்குள்ளாக மட்டும் ஜெபித்தால், 14-15 பேர் வரை எல்லாரும் கேட்கும் வண்ணமாக ஜெபிக்கலாம். இந்த விதமான ஜெபக்கூட்டத்தில் யாராவது 10 நிமிடங்களுக்கு மேலாக ஜெபிப்பாரென்றால், அந்த நபர் கூட்டத்தின் கால் பகுதியை ஆக்கிரமித்துக் கொள்ளுகிறவராக இருக்கிறார். மேலும், இவ்விதமான செயல் நியாயமற்றதும், பெருமைக்குரியதுமான செயலாக இருக்கிறது. சிறிய ஜெபக்கூட்டமாக இருக்குமென்றால், அங்கு அதிக ஜெப நேரம் எடுத்துக்கொள்ளுவது அவசியமாய் இருக்கும். அநேகர் ஜெபத்தில் உற்சாகத்தோடு ஈடுபடுவதற்கு

அவரவர் எடுக்கும் ஜெபங்கள் நேரங்கள் குறைவாக இருக்குமாயின், அந்த ஜெபக்கூட்டம் மிகுந்த ஆசீர்வாதமாக இருக்கும். ஆகவே பெரிய ஜெபக் கூட்டங்களில் நீண்ட நேர ஜெபத்தை உற்சாகப்படுத்தாமல் சிறிய ஜெபங்களை உற்சாகப்படுத்த வேண்டும்.

*v.* "போதகமார்களின் ஜெபம்" மூத்த விசுவாசிகளுக்கும், சபை அலுவலர்களுக்கும் ஒரு எடுத்துக்காட்டுள்ளதாகவும், கற்றுக் கொள்ளுகிற வண்ணமாகவும் இருக்க வேண்டும்.

*vi.* ஜெபிப்பவர்கள் மற்றவர்கள் கேட்கும் வண்ணம் நின்று ஜெபிப்பது நலமாக இருக்கும்.

*vii.* எந்தவித பிரசங்கமோ, கடிந்துகொள்ளுதலோ, முறையிடுதலோ, ஜெபத்தில் இருக்கக்கூடாது.

*viii.* எல்லாரும் ஜெபத்தின் முடிவில் அங்கீகரிக்கும் வண்ணமாக, "ஆமென்" என்று ஒன்றாக, ஒரே சப்தத்தில் சொல்லவேண்டும்.

*ix.* ஜெபங்களுக்கு இடையில் எந்தவித காலமோ, நேரமோ, இடைவெளியோ கொடுக்காமல், கலந்துகொள்ளுபவர்கள் தொடர்ந்து ஜெபித்துக் கொண்டே இருப்பதற்கு உற்சாகப்படுத்த வேண்டும்.

*x.* ஜெபக்கூட்டம் காலப்போக்கில் குன்றிப்போக ஆரம்பித்தால், சபை அலுவலர்கள் மூலமாக, தனிப்பட்ட விதத்தில் ஜெபிப்பதற்கு மக்களை உற்சாகப்படுத்த வேண்டும்.

"இஸ்ரவேல் வம்சத்தாருக்காக நான் இதை அநுக்கிரகஞ்செய்யும்படி அவர்கள் என்னிடத்தில் விண்ணப்பம் பண்ணவேண்டும்" (எசே *36:37*) என்று ஆண்டவர் சொல்லும் வண்ணமாக, ஒரு சபையில் ஜெபக்கூட்டமானது உற்சாகமுள்ளதாகவும்,

ஊக்கமானதாகவும், அர்ப்பணிக்கப்பட்டதாகவும், பல்வேறு பொறுப்புகளை உணர்ந்து, பகிர்ந்துகொண்டு ஜெபிப்பார்கள் என்றால் அந்த சபையின் இவ்விதமான முயற்சிகளை தேவன் ஆசீர்வதிப்பார் என்பதில் சந்தேகமில்லை.

ஒரு சிறந்த நடைமுறைக்கேதுவான ஜெபக்கூட்டம் ஒரே நாளில் சாதித்து விடமுடியாது. சில நண்பர்கள் தங்களுடைய வழக்கமான ஜெபத்திலிருந்து அல்லது பொதுவான ஊழியங்களுக்காக அதிகமாய் ஜெபிப்பதிலிருந்து மாறுவதற்கு சில காலங்கள் பிடிக்கும். சில குறிப்பிட்ட பாரங்களுக்காக பாரத்துடன் ஜெபிப்பதற்கும் மற்றும் தேவையில் இருக்கிற மக்களுக்காக ஆண்டவருக்கு முன்பாக உயர்த்தி காண்பிக்கும் வண்ணமாக ஜெபிப்பதற்கும் மற்றும் தங்களுடைய சொந்த சபையின் ஊழியங்களாகிய வீடுகள் சந்திப்பு, ஞாயிறு பணிகள், ஞாயிறு பள்ளிகள் ஆகியவற்றிக்கு முக்கியத்துவம் கொடுத்து ஜெபிப்பதற்கு அவர்கள் கற்றுக் கொள்ள சில நாட்கள் ஆகும்.

ஜெபத்திற்கும், வேத பாட ஆராய்ச்சிக்கும் தனித்தனியே கூட்டங்களை வைப்பதினால் சிறந்த அனுகூலமான லாபங்கள் உண்டு. பிரத்யேகமாக ஜெபக்கூட்டமானது தனிப்பட்டதும் வல்லமையான கூட்டமாகவும் இருக்கமுடியும். ஒரு ஐக்கியமானது, ஊக்கமுள்ள ஆனால் சீக்கிரத்தில் பொருந்திக்கொள்ளாத, சில விநோதமான நண்பர்களைக் கொண்டிருக்கலாம். ஆனால், சக விசுவாசிகளோடு அமர்ந்து சரியான விதங்களில் வேண்டிய போதனைகளைப் போதித்து அவர்களை உற்சாகப்படுத்தி வழிநடத்துவதே போதகப் பணியாகும்.

ஜெபக் கூட்டத்தை மேம்படுத்துவதில் நம்முடைய கொள்கையில் ஒன்றாக இருக்கிறதா? நம்முடைய ஜெபத்தின் அஸ்திபாரம் பலவீனமாக இருக்கும் பட்சத்தில், நாம் சுவிசேஷப் பணியில் ஆர்வமாக ஈடுபட்டுக்கொண்டும்,

பலத்திட்டங்களை நீட்டிக்கொண்டும் இங்கும் அங்குமாக அலைந்து கொண்டிருப்பதில் ஒரு பிரயோஜனமும் இல்லை. பிரசங்க ஊழியத்திற்காக அதிகமாக ஜெபம் எறேடுக்கப்படுகிறதுண்டா? சபையின் அனைத்து துறைகளின் வேலைகளும் ஒவ்வொரு வாரமும் முடிக்கப்படுகிறதுண்டா? தேவனுக்கு முன்பாக சபையின் மக்களும் அவர்களின் சூழ்நிலைகளும் தனிப்பட்ட விதத்தில் கொண்டுவரப்படுகிறார்களா? ஜெபத்தில் ஒரு துரிதத்தன்மையான போக்கு காணப்படுகிறதா? அவ்விண்ணப்பங்கள் எல்லாம் ஒரு குறிப்பிட்ட நோக்கத்தோடு முன்னேறிச் செல்லுகிறதாக இருக்கிறதா? தேவன் தாமே ஒவ்வொரு சபை போதகரையும், தலைவரையும் தங்கள் சபைகளை ஜெபிக்கும் சபையாக கட்ட உதவி செய்வாராக.

(ஜெபக்கூட்டத்திற்கான இன்னும் அநேக ஆவிக்குரிய சத்தியங்கள் இந்நூலின் ஆசிரியருடைய “*The Power of Prayer Meeting*” என்ற புத்தகத்தில் கொடுக்கப்பட்டுள்ளது)

# 3. பரிசுத்தமாக்கப்பட்ட சபை

மற்றொரு அடிப்படையான குறிக்கோள், நோக்கம் என்னவென்றால், நம்முடைய சபை வளர்ச்சியிலும், சுவிசேஷப் பணியிலும் தேவனுடைய ஆசீர்வாதத்தைத் தக்கவைத்துக் கொள்ளுவதற்கு "பரிசுத்தமாக்கப்பட்ட சபை" யாக அமையப்பண்ணுவது மிக அவசியமாக இருக்கிறது. இதையே இன்னொரு விதத்தில் "நன்கு போதிக்கப்பட்ட சபை" (A Well Pastored Church) என்று சொல்லலாம்.

இன்றைக்கு அநேக புகழ் வாய்ந்த போதகர்கள் தங்கள் சபைகளை நன்கு வழிநடத்திச் செல்ல முற்படாததினால், குழப்பங்களும், குளறுபடிகளுமே தங்கள் பணியின் முடிவாக காண்கிறார்கள். ஒரு பரிசுத்தமாக்கப்பட்ட சமுதாயமாக உருவாக்குவதற்கு, நம்முடைய சபையை எவ்வித சிறப்புத் தன்மையோடு வழிநடத்திச் செல்லுகிறோம்? பின்வரும் வார்த்தையின் மூலமாக பவுல் ஒரு அளவுகோலை வைப்பதை நாம் பார்க்கலாம். "எந்த மனுஷனையும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேறினவனாக நிறுத்தும்படிக்கு, அவரையே நாங்கள் அறிவித்து, எந்த மனுஷனுக்கும் புத்திசொல்லி, எந்த மனுஷனுக்கும் எல்லா ஞானத்தோடும் உபதேசம் பண்ணுகிறோம்"(கொலோ 1:28).

ஓ! நாம் நிறைய காரியங்களில் ஈடுபட வேண்டியவர்களாக இருக்கிறோம். நம்முடைய சபைகளில், ஆவிக்குரிய பரிசுத்தம் போதிக்கப்பட வேண்டும், தற்பரிசோதனை வற்புறுத்தப்பட வேண்டும், நல்ல நோக்கத்தோடுக் கூடிய பரஸ்பரமான கடிந்து கொள்ளுதல் உற்சாகப்படுத்தப்பட வேண்டும். நாம் சபை அங்கத்துவத்தை எந்த அளவுக்கு முக்கியப்படுத்த முடியுமோ,

சிறப்பிக்க முடியுமோ, அந்த அளவுக்கு நிச்சயப்படுத்தப் பிரயாசப்படவேண்டும். நாம் புதிய அங்கத்தினர்களை சபைக்குள்ளாக சேர்க்கும்போது, அவர்கள் உண்மையாகவே கிறிஸ்துவை நேசிக்கிறவர்களாகவும், ஆவிக்குரிய காரியங்களில் முன்னேற வேண்டும் என்ற விருப்பம் கொண்டிருக்கிறார்களா என்ற நிச்சயத்தோடு மிக கவனமாக அவர்களைச் சேர்க்க வேண்டும். அது மாத்திரமல்ல, பல ஆண்டுகளாக இருக்கும் அங்கத்தினருடைய தவறான நடவடிக்கைகளைப் பார்த்து, நாம் கண்டும் காணாமலும் இருக்கக் கூடாது.

நன்கு பராமரிக்கப்பட்ட, கவனிக்கப்பட்ட ஐக்கியத்தில்(சபையில்) மிக ஆபத்தான குற்றங்கள் மேல் எடுக்கும் போது ஒழுங்கு நடவடிக்கைகள் அவசியமானது. அதேசமயத்தில், சிறு சிறு பாவங்களைக் குறித்து எப்பொழுதும் விழிப்பாகவும், கவனமாகவும் இருக்க வேண்டும். இந்த சிறு சிறு பாவங்களே சபையின் ஆசீர்வாதத்தையும், பரிசுத்தத்தையும் பாதிக்கின்றதாகவும், குற்றம் இழைத்தவர்களைப் புண்படுத்துகிறதாகவும் இருக்கிறது. இவ்விதமாக கண்காணிக்கும் செயல், வரம்பு மீறிய செயல் அல்ல. ஏனென்றால் இச்செயலானது ஒரு தனிமனிதனுடைய சொந்த விஷயத்தில் எவருடைய தலையீடும் இல்லாதபடி செயலாற்றுகிறது. ஆம்! தம்முடைய சபை மக்களிடத்தில் அன்பும் பாசமும், உண்மையான மரியாதையும் கொண்ட தகுதிவாய்ந்த போதகர்களினால் கையாளப்படுகிற செயல் இது.

எடுத்துக்காட்டாக, வீண்பேச்சு, அரட்டை போன்ற பிரச்சினைகளைக் கூறலாம். சில நேரங்களில் முறுமுறுத்தலும், குற்றம் கண்டு பிடிப்பதும், புறங்கூறுவதுமான செயல்கள் சபைக்குள்ளாக மெதுவாகப் புகுந்துவிடுகிறது. அதாவது யாராவது தும்பினாலும் கூட

கேள்வி கேட்டுக்கொண்டிருக்கிற அடக்குமுறை போக்குள்ள போதகராக இருக்க வேண்டும் என்று சொல்லவில்லை. அப்படியான செயல்கள் அளவுக்கு மீறியதாகவும் அல்லது வரம்புக்கு மீறிய செயலாகவும் மாறிவிடும். தங்களுடைய காரியத்தைச் சரியமைத்துக் கொள்ளுவதற்கும், தங்களுடைய பாவங்களைக் குறித்து வருத்தப்படுவதற்கும் மனசாட்சியோ, ஆவிக்குரிய பலமோ சபை மக்களிடத்தில் இல்லாததுபோல, போதகர்களாகிய நாம் அவர்களுடைய ஒவ்வொரு சிறிய காரியங்களிலும் தலையிட்டுக் கொண்டிருக்கத் தேவையில்லை. இருந்தபோதிலும் சபையில் மக்கள் வீண்பேச்சிலும், அரட்டையிலும் ஒருவரையொருவர் குற்றம் கண்டுபிடிப்பதிலும் ஈடுபடும்பொழுது, அது மிக வருத்தத்திற்குறியதும், ஆபத்துமிக்க பிரச்சனையாகவும் இருக்கும். ஆகவேதான், இவ்விதமான போக்கிலே போய்க் கொண்டிருப்பவர்களைப் பார்த்து நேரடியாக பேசவேண்டியதாக இருக்கிறது. அவர்கள் ஆலோசனையினால் மாற்றப்படக் கூடியவர்களாக இருக்கலாம். ஆனால், அவர்களுக்கு ஆலோசனை கொடுக்கப்படாவிடில், அவர்களே சபைக்கு கசப்பான வேர்களைப் போல மாறிவிடுவார்கள். கேள்வி என்னவெனில் நம்முடைய சபையில் முறுமுறுக்கிறவர்கள், வீண் பேச்சுக்காரரர்கள் போன்றவர்களை தொல்லை என்று எண்ணி நாம் அவர்களை வெறுத்துவிடுகிறோமா? அல்லது அவர்களுக்கு ஏதாவது உதவி செய்யப்படுகிறதா? ஆம்! இவ்விதமான பிரச்சனைகளை ஆரம்பத்தில் கண்டுபிடிப்போமென்றால் மரியாதையுடனும், சகோதர பாசத்துடனும் கூடிய தன்மையைக் கொண்டு மிக எளிதாக முடித்துவிடலாம்.

பொருளாசையும் கூட பிரச்சனைக்குரிய ஒன்றாக இருக்கிறது. ஆகவே இதைக்குறித்தும் நாம் மிகுந்த எச்சரிப்பு உள்ளவர்களாக இருக்கவேண்டும். பொருளாசை என்ற பேராசையில் விழுந்து கட்டுப்பாடு இல்லாதவர்களாக

இருப்பவர்களை நாம் என்ன செய்யவேண்டும்? மற்றவர்களுக்கும், தங்களுக்கும் கண்ணியாக இருக்கிற ஆடம்பரம், நியாயமான ஒன்று என வாதிப்பவர்களை நாம் எவ்வாறு அணுகலாம்? அப்படியானவர்களோடு பேசி, உதவிசெய்து, நல்வழிக்காட்டி உற்சாகப்படுத்தலாமா?

தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் (நெடுந்தொடர்கள், திரைப்படங்கள், இசை நிகழ்ச்சிகள், உலகமயமான பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள்) போன்றவற்றில் மயங்கி அதிலே விழுந்து போனவர்களைக் குறித்து நாம் என்ன சொல்லுவோம்? இன்னும் சொல்லப்போனால் சபையின் அங்கத்தினர்களின் வாழ்க்கையிலும் கூட இவைகள் மெதுவாக நுழைந்துவிடுகிறது. ஆம்! போதகர்களும், மூப்பர்களும் இதைக்குறித்து கேள்விப்படும் பொழுது மிகுந்த விழிப்புணர்வுள்ளவர்களாக இருக்கவேண்டும். சபையார், ஆசீர்வாதத்தை பெற்றுக்கொள்ள வேண்டுமானால் ஆலோசனைகள், உதவிகள், போதனைகள் மற்றும் எச்சரிப்புகளும் அவர்களுக்கு அவசியமாக இருக்கிறது. அவர்களுடைய சந்தோஷத்திற்கு நாம் உதவுகிறவர்களாக இருக்கிறோம். ஆனால் அவ்விதமான நோக்கத்தோடு நாம் செயல்படுகிறவர்களாக இருக்கிறோமா?

சபை விசுவாசிகள் யாராவது, பொழுதுபோக்கு நிறைந்த உலகப்பிரகாரமான இடத்திற்கு செல்லுகிறார்களா? இவ்விதமான செயல், எவ்வித தாமதமுமின்றி மற்றவர்களுக்கும் பரவக்கூடும். ஏனென்றால், மூத்த விசுவாசிகள் வைக்கிற தவறான முன் உதாரணத்தினால் அநேக சமயங்களில் அவர்களுடைய கட்டுப்பாடுள்ள மனச்சாட்சி மீறப்படுகிறது. சில போதகமார்கள், இவ்விதமான விஷயத்தில், தலையிட்டுக் கொள்ளாதபடி, கண்டும் காணாமலும் இருந்து அப்படிப்பட்டவர்களை கை நழுவிவிடுகிறவர்களாக இருப்பார்கள். அவர்களுடைய சபைகளில் பிரச்சனை

உருவாகும்பொழுது அந்த போதகமார்கள், மற்றவர்களுடைய பொறுப்பில் அப்பிரச்சனையை சமாளிக்கச் சொல்லிவிட்டு வேறு நல்ல இடத்திற்கு ஓட்டம் பிடித்துவிடுகிறவர்களாக இருப்பார்கள்.

உலகமயமான பேச்சைக்குறித்தும், உலகப்போக்குள்ள ஆடையைக் குறித்தும் நம்முடைய போதகமார்களின் கொள்கைகள் என்ன சொல்லுகிறது? நாம் அநேக சமயங்களில் ஆலயத்திற்கு வருகிற சபை மக்களின் “மோசமான வருகை” *(Poor Attendance)* பிரச்சனைகளை சந்திக்கின்றோம். மக்கள் இதை சரியாக புரிந்துகொண்டாலும், காலப்போக்கில் அவர்களுடைய வருகையானது, கொஞ்சம் கொஞ்சமாக குறைந்து, பிறகு அவை ஒழுக்கக் குறைவாக மாறிவிடுகிறது. ஆகவே இப்படியான ஒழுக்க சீர்கேட்டிற்குள்ளாக விழுந்து விடாமல், ஆரம்பத்திலேயே அப்படியானவர்களை கண்காணித்து, அவர்களுக்கு கொடுக்கவேண்டிய போதனைகளைக் கொடுத்து உற்சாகப்படுத்திக்கொண்டே இருக்கவேண்டும்.

நிச்சயமாக, நாம் பிரசங்கிக்கும் பிரசங்கத்தின் ஒரு பகுதியாக அப்படியானவர்களைக் கண்டித்து உணர்த்துகிற போதனைகளை அடிக்கடி கொடுத்துவருகிறோம். இருந்தாலும், தனிப்பட்ட விதத்தில் போதகர்களோ அல்லது உதவிக்காரர்களோ அப்படிப்பட்டவர்களுக்கு ஆலோசனை கொடுப்பது மிக அவசியமாக இருக்கிறது. அநேக ஆண்டுகளாக அலட்சிய மனப்பான்மையோடு போதிக்கப்பட்ட போதனைகளே, கூட்டங்களில் குறைவான மக்களின் பங்கேற்புக்குக் காரணமாகயிருக்கிறது. விசுவாசிகள், தங்களுடைய ஆவிக்குரிய கடமைகளைத் தொடர்ச்சியாக தக்கவைத்துக் கொள்ளுவதற்கு, போதகர் எவ்வித தனிப்பட்ட பணியை செய்யாததும் இதற்கு காரணம்.

அருகாமையில் உள்ள சபை சிலநேரங்களில் பிரச்சனையைக் கொடுக்கலாம். அப்படியாக, வேதப்பூர்வமற்ற, முரண்பாடுள்ள கொள்கைகளைக் கடைபிடித்துக் கொண்டிருக்கிற சபை அருகாமையில் இருக்குமென்றால், நம்முடைய சபை விசுவாசிகள், அப்படியான சபையோடு நெருங்கிய ஐக்கியம் வைக்கக்கூடாது. திடீரென்று, நம்முடைய சபையிலேயே ஒரு சில இளம் வாலிபர்கள், புதுமையை அனுபவிக்க வேண்டும் என்று சொல்லி, கிளர்ச்சியடைந்தவர்களாய் ஒரு சிறு கூட்டத்தாரை அங்கு அழைத்துச் செல்லுபவர்களாகவும் காணப்படுவார்கள். ஆம்! புதுமையான காரியம் எப்பொழுதும் அருமையாகத்தான் இருக்கும். மூப்பர்கள் இந்தமாதிரியான செயலினால் கோபப்படவோ, எரிச்சல் அடையவோ தேவையில்லை. மாறாக அப்படியான நண்பர்களுக்கு, அவர்களுடைய செயல்பாடுகள் ஏன் முரண்பாடு உள்ளதாக இருக்கிறது என்பதை விளக்கிக் கூறவேண்டும். இந்த செயலை எவ்வித தாமதமுமின்றி செய்ய வேண்டும்.

பொதுவாக, போதகமார்களிடத்தில் பணிபுரிகிற உதவிக்காரர்கள், இவ்விதமான காரியங்களில் உதவி செய்யலாம். இதில் சிலபேர், அதிகாரத்தோடும், மிகக் கடுமையாகவும் செயல்படுவதுமுண்டு.விசுவாசிகள் தவறான காரியத்தில் சற்று தவறி விழும் நேரத்தில், நாம் அதைக்குறித்து ஒரு பெரிய பாவமாகவோ அல்லது ஆவிக்குரியத் தன்மை அல்லாததாகவோ இருக்கிறது என்று எண்ணி அவர்களை ஒருபோதும் இழிவாக நடத்தக்கூடாது. பவுலைப்போல நாம் அவர்களிடத்தில் ஆவிக்குரிய காரியங்களை எதிர்பார்க்கிறவர்காளாக இருக்கிறோம். பவுல் பிலிப்பியர் 4ம் அதிகாரத்தில் ஒரு முக்கியமான ஆலோசனையைக் கொடுக்கிறதை நாம் பார்க்கலாம். "சுவிசேஷ விஷயத்தில் என்னோடேகூட மிகவும் பிரயாசப்பட்ட அந்த ஸ்தீரிகளுக்கு உதவி செய்யுங்கள்" என்று கூறுகிறார். ஆண்டவருடைய

ஒழுக்க நெறிமுறைகள், முதலாவது கனிவாயும், பின்பு முன்னேறிச் செல்லுகிறதாகவும் இருக்கிறதை நினைவில் வைத்தவர்களாய், நாம் நம்முடைய பணியை உண்மையான கனத்தோடு செய்கிறவர்களாக ஈடுபடவேண்டும். "என் மகனே, நீ கர்த்தருடைய சிட்சையை அற்பமாக எண்ணாதே, அவர் கடிந்துகொள்ளும்போது சோர்ந்துபோகாதே"(நீதி 3:11). நாம் காரியங்களைத் துரிதமாக கவனிக்க வேண்டியவர்களாய் இருக்கிறோம். அநேக முறை, நம்முடைய விசுவாசிகள் நம்முடைய வழிநடத்துதலை மதித்து திரும்பும் சமயங்களிலும், கர்த்தருக்குள்ளாக நம்மோடு உற்ற நண்பர்களாக இன்னுமாக இருக்கும்பொழுதும், நாம் அவர்களை வழிநடத்தாததால் பிரச்சினைகள் பெருகிக்கொண்டே போகின்றன.

சில போதகர்கள், ஆலோசனையை உச்சக்கட்டத்திற்கு எடுத்துச் செல்லுகிறார்கள் என்பது உண்மைதான். அநேக காரியங்களை ஆலோசனையின் மூலமே செய்கிறார்கள். நாம் முன்பு பார்த்த அநேக பிரச்சினைகள், கொடுக்கப்படுகிற போதனைகள் நடைமுறை வாழ்க்கைக்கு ஏற்றதாகவும், அதை நடைமுறை வாழ்க்கையில் செயல்படுத்தக்கூடியதாகவும் காணப்பட்டால் தீர்ந்துவிடும்.

வேண்டுமென்றே சற்று வித்தியாசமாக, தந்திரமாய் நம்முடைய சபையை குலைக்கும் ஒருவரை பற்றி நாம் கவனிக்கவேண்டும். அத்தகைய நபரானவர் சபையின் ஒழுக்கத்தைக் கெடுக்கிறவராகக் காணப்படுவார். ஆச்சரியமான விதத்தில் அநேக போதகர்கள் மற்றவர்களைக் குறித்துச் சொல்லும் அறிக்கையில் காணும் வண்ணமாக, இன்றைய சபைகளில் இது மிகவும் சாதாரணமாகக் காணப்படுகிறது. உணர்ச்சி அடிப்படையிலான பக்தியே இதற்கு பல நேரங்களில் காரணமாக உள்ளது. ஆனால், அது தன்னிடத்தில், அழிப்பதற்குக் கத்தியைக் கொண்டவனைப்போல அவன் காணப்படுகிறான். அவனுக்கு ஒருவேளை, கொள்கையில்

வேறுபாடுகள் காணப்படலாம். அதைக்கொண்டு அவன் சபையின் போதனைகளை குற்றப்படுத்தலாம் அல்லது அவன் பெருமையுள்ளவனாக, எல்லோரும் அவனைக் கவனிக்க வேண்டும் என்று எண்ணுகிறவனாய், தனக்கு அதாவது பதவி வேண்டும் என்று எதிர்பார்த்து, கிடைக்காமல் ஏமாற்றம் அடைந்து இவ்வாறு செய்யக்கூடும்.

இப்படிப்பட்டவன் முதலில் ஆத்துமாக்களை தன்னுடைய காரியங்களை ஏற்றுக்கொள்ளும்படியாகச் சிறிய கருத்தாய்வுகள் அவர்களுடன் செய்து தன் வசமாக கொண்டுவர பிரயாசப்படலாம். சாத்தானானவன் சபைகளின் சமாதானத்தையும், சந்தோஷத்தையும் கெடுப்பதற்காக சுற்றித்திரிந்து கொண்டிருப்பதினால், இந்த காரியமானது, சிறந்த பேர்போன சபைகளிலும் கூட காணப்படலாம். ஆகவே, சில நல்ல ஆத்துமாக்களைக் கூட வழிதப்பிச் செல்ல வைக்கும் இந்த சாத்தானின் உபாய தந்திரங்களுக்கு நாம் எச்சரிக்கை உள்ளவர்களாக காணப்படுகிறோமா?

பரிசுத்தமாக்கப்பட்ட, சுத்திகரிக்கப்பட்ட ஐக்கியத்தை நாம் கொண்டுவர பிரயாசப்படும் பொழுது, வெளியில் (சபைக்கு புறம்பே) இருந்துவரும் ஆதிக்கங்களுக்கு நாம் கொண்டுள்ள கொள்கை என்ன? சபை அநேக முறை இவ்விதமான காரியங்களை மிகவும் சாதாரணமாக எண்ணிவிடுகின்றன. சாத்தானானவன் கோதுமையைச் சுளகினால் புடைப்பது போலச் சபையைப் புடைப்பதற்கு ஆவலாக இருக்கிறான். சில போதகர்கள் தங்களுடைய சபை மக்களையோ அல்லது வாலிபர்களையோ ஸ்தாபனங்கள் போன்ற காரியங்களுக்கு அனுமதித்து அவர்களை நிலைகுலையச் செய்கிறான்.

தங்களுடைய சபையில் ஒரு சரியான வேதரீதியான கொள்கை அளவை அடைவதற்கு முன்னரே, அந்த மக்கள் போதனைகளையும், உணர்ச்சி அடிப்படையிலான பக்தியை

கற்றுக்கொள்ளுகிறவர்களாக காணப்படுவார்கள். அதேபோல, அநேக போதகர்களும் மற்ற சபையில் இருந்து வரும் போதகர்களைக் குறித்த காரியங்களிலும் விழிப்பற்றவர்களாக காணப்படுகின்றனர்.

மற்ற சபைகளிருந்து நம்முடைய ஐக்கியத்திற்கு வருபவர்களைப் பற்றி நாம் என்ன சிந்தை கொண்டுள்ளோம்? சிலர் பெரிய தவறான உபதேசங்களைத் தங்களுடன் கொண்டுவருபவர்களை, நாம் அவர்களுக்கு போதித்து அவர்களை சரியான சத்தியத்திற்குள்ளாக கொண்டுவர முயற்சிப்போம். அவர்கள் தவறான கொள்கை உடையவர்களாக காணப்பட்டாலும், அவர்களைச் சுட்டெரிப்பதைப் போல செயல்படக் கூடாது. ஆனால், அவர்களுக்கு சரியான போதனையும், ஆலோசனையும் கொடுக்க வேண்டும். இல்லாவிடில், அவர்கள் அநேக வாலிபர்களை வேதாகமத்தைக் குறித்த தவறான சிந்தைக்குள்ளாக வழிநடத்தி விடுவார்களே. அநேகர் அவர்களுடைய போதனைக்கு பலியாய் போய்விடுவார்களே.

இக்காலத்தில் வெளிவருகின்ற சுவிசேஷ புத்தகங்களைக் குறித்து நாம் அக்கறையுள்ளவர்களாக, அவைகளைப் படித்து அவைகளைக் குறித்து நம்முடைய சபை மக்களை எச்சரிக்கின்றோமா? சில சமயங்களில் சீர்திருத்த சத்திய பத்திரிக்கைகளிலும் கூட ஆபத்தான சத்தியங்களைக் கொண்டிருக்கும் சில பக்கங்களை நாம் காணலாம். நம்முடைய புத்தக சாலையில் இருப்பவர்கள், புத்தகங்களை வாசிப்பவராக கூட இருக்கமாட்டார்கள். இது சபையை சீர்குலைக்கும் ஒரு ஆபத்தான காரியம். போதகர்களே! மூப்பர்களே! உங்கள் புத்தக சாலையில் இருக்கும் புத்தகங்களைப்பற்றி நீங்கள் நன்றாக அறிந்திருக்கிறீர்களா? பத்திரிக்கைகளிலும், புத்தகங்களிலும் காணப்படும் தவறான காரியங்களைக் குறித்து நீங்கள் உங்கள் சபை மக்களை எச்சரிக்கிறீர்களா?

ஒரு சபையில் தேவனுடைய இராஜ்யத்திற்கே முக்கியத்துவம் கொடுத்து, அவருக்காக உண்மையாய் உழைக்கும் மக்களே ஒரு தன்னலமற்ற வாழ்வை பிரதிபலிக்கிறவர்களாக காணப்படுவார்கள். இதுவே, புதிய விசுவாசிகளுக்கு ஒரு சிறந்த உதாரணமாக அமையும். நம்முடைய மந்தைகளுக்கு, மாதிரிகளாக தியாகமுள்ள, அன்புள்ள, கருணை உள்ளம் கொண்ட மூப்பர்களையும், மூத்த விசுவாசிகளையும் தேவன் தாமே நமக்குக் கொடுக்க வேண்டும் என்று ஜெபிப்போமாக. இதுவே, பரிசுத்தமாக்கப்பட்ட சபையாக, நம்முடைய சபையை அவ்வண்ணமாக மாற்றும் பாதையில் நான்கில் மூன்று பங்கை கொண்டிருக்கவும், நம்முடைய சபை வாலிபர்களும், பரிசுத்தத்தில் வளர்வதற்கு ஏற்றதாயும் இருக்கும்.

# 4. உழைக்கும் சபை

ஸ்பர்ஜன் காலத்தில் ஒரு அமெரிக்க கிறிஸ்தவ பத்திரிக்கையின் ஆசிரியர், அவரின் ஊழியத்தை ஆராய்ச்சி செய்வதற்காக ஸ்பர்ஜனின் ஆலயத்தில் தங்க தீர்மானித்தார். அப்பத்திரிக்கையின் ஆசிரியர் ஒவ்வொரு மாலையும் இவ்வாலயத்திற்கு வரும்போதெல்லாம், ஒரு வித்தியாசமான காட்சியை பார்க்க முடிந்தது. ஆம்! அவ்வாலயத்தில் உள்ள கீழ் அறைகளும், மேல் அறைகளும் முழுக்கட்டிடமே மும்முரமாக காணப்பட்டது. மாவட்ட சந்திப்புகளுக்காக குழுக்கள் கூடுகிறதும், ஜெபக்கூட்டங்கள் கூடுகிறதும், ஞாயிறு பள்ளி ஆசிரியர்கள் கூடுகிறதும் இப்படியாக பல கூடுகைகள் கூட்டப்பட்டுக் கொண்டிருப்பதைப் பார்க்க முடிந்தது. அப்பத்திரிக்கையின் ஆசிரியர் பிரசங்கியைக் குறித்து, புகழ வந்தவராக மாத்திரமல்ல, ஒரு உழைக்கும் சபையைக் கண்டுகொண்டார்.

வருத்தமானது என்னவென்றல் இன்றைக்கு அநேக சபைகளில் அங்கத்தினர்கள் ஒழுங்காக, ஆலயம் வந்தாலும் அவர்கள் சொகுசாக வெறுமையாய் வந்துபோகிற மக்களைக் காட்டிலும் சிறிது மட்டுமே வித்தியாசப்படுகிறவர்களாய்க் காணப்படுகின்றனர். மனிதனை பயன்படுத்துவதில் தேவன் வகுத்த திட்டம் என்னவென்றால், நாம் கர்த்தருடைய பணிகளில் ஒப்புக்கொடுத்து அதிகமான மக்களை உற்சாகப்படுத்தி, இசைவாய் செய்யாமல் போனால், நாம் ஒன்றும் சாதிக்க முடியாது. இதுவே உழைக்கும் சபையின் கொள்கையாகும். இதைக் குறித்து எபேசியர் **4:16**-ல் அழகாக சொல்லப்பட்டுள்ளது. இங்கே பவுல், சபையின் வளர்ச்சியைக் குறித்து "அவராலே சரீரம் முழுதும், அதற்கு உதவியாயிருக்கிற

சகல கணுக்களினாலும் இசைவாய்க் கூட்டி இணைக்கப்பட்டு, ஒவ்வொரு அவயவமும் தன் தன் அளவுக்குத்தக்கதாய்க் கிரியைசெய்கிறபடியே, அது அன்பினாலே தனக்குப் பக்திவிருத்தி உண்டாக்குகிறதற்கேதுவாகச் சரீர வளர்ச்சியை உண்டாக்குகிறது" என்று கூறுகிறார்.

அநேக சபைத் தலைவர்கள் எழுச்சியுள்ள ஞாயிறு பள்ளிகளை வைத்துக் கொள்வதற்கு வாஞ்சிப்பார்கள். ஆனால், அதை ஒழுங்காக நடத்திக்கொண்டு போவதற்கு எவர்களும் உதவமாட்டார்கள். இன்றைக்கு சொல்லப்போனால், நல்ல கிறித்தவர்கள், உழைக்கும் சபைக்குரிய பழைய காலத்து அருமையான முறைகளுக்கு தொடர்பற்றவர்களாக, அவ்விதமான செயல் முறைகளுக்கு தங்களை ஒப்புக்கொடுக்காதவர்களாய் உள்ளனர். ஆதலால், இவைகள் ஆவிக்கேற்ற பிரகாரமாக இல்லாததாகவும், வளர்ச்சியற்றதாகவும் காணப்படுகிறது. உழைப்பற்ற கிறிஸ்தவப் பணியானது தன்னைக் குறித்து சிந்திப்பதிலும், சுயமானது ஆக்கிரமித்து கொண்டதாயும், ஆவிக்கேற்ற பிரகாரமாக நிறைவேற்றப்படாத மக்களாகவும், சுய அனுபவ மகிழ்ச்சியினாலே நிறைந்தவர்களாயும் இருப்பதற்கு வழி வகுக்கின்றது.

நாம் புதிய ஏற்பாட்டில் காண்கிற உழைப்பைக் குறித்தான வினைச்சொல்லைக் கருத்தில்கொண்டு, மறுபடியுமாக உழைக்கும் சபையைக் குறித்த வேத ரீதியான சத்தியங்களைப் பற்றிக்கொண்டு முன்னேறிச் செல்லுவோம். உடனே கவனிக்கப்பட வேண்டிய கிறிஸ்தவ பணியைக் குறித்து பவுல் நான்கு முக்கிய பதங்களைப் பயன்படுத்துகிறார்.

முதலாவதாக, உழைப்பைக் குறித்தான பதம். இது போதகர்களுக்கு மாத்திரமல்ல, அனைத்து விசுவாசிகளுக்கும் உரித்ததாயிருக்கிறது. பவுல் அடிக்கடி உபயோகப்படுத்தும் வாக்குத்தத்த வசனமானது, 1 கொரி 15:58 "ஆகையால்,

எனக்குப் பிரியமான சகோதரரே, கர்த்தருக்குள் நீங்கள் படுகிற பிரயாசம் விருதாவாயிராதென்று அறிந்து, நீங்கள் உறுதிப்பட்டவர்களாயும், அசையாதவர்களாயும், கர்த்தருடைய கிரியையிலே எப்பொழுதும் பெருகுகிறவர்களாயும் இருப்பீர்களாக". இங்கே சொல்லப்பட்டிருக்கிற "பிரயாசம்" என்ற கிரேக்க வார்த்தையானது, கடுமையான உழைப்பைக் குறித்துச் சொல்லப்படுகிறது. வலியோடு வேலையாள் செய்கிற பதமாக இருப்பதினால், இது கடுமையான வார்த்தையாக காணப்படுகிறது. முக்கியமாக, தேவன் நம்மை இலகுவான பணிக்கோ அல்லது இன்பகரமான பணிக்கோ அழைக்காமல், அவருடைய மகிமைக்காக தியாகத்தோடு கூடிய பணிக்கென்று அழைத்திருப்பதினால், பவுல் இந்த பதத்தை அதிகமாக உபயோகப்படுத்துகிறார்.

இரண்டாவதாக, கிறிஸ்தவ பணியைக் குறித்து சொல்லுகிற பதம் "போராடுகிறதைக்" குறிக்கிறது. இது கடும் முயற்சியையும், உறுதிமனப்பான்மையையும் தெரியப்படுத்துகின்ற விளையாட்டு சம்மந்தப்பட்ட வார்த்தையாக இருக்கிறது.

மூன்றாவதாக, இன்னும் கடுமையாக, போட்டியிடும் துறையில் இருந்து வருகிற வார்த்தையான "பெருந்துயரோடு" *(Agonizing)* என்பதைக் குறிக்கின்றது. போட்டியிடுதலில் குறிக்கப்படுகிற கிரேக்க வார்த்தையிலிருந்து வருகிறது. இதை நாம் எவ்வாறு மனதில் வைத்துக்கொள்ள வேண்டுமென்றால், ஒரு ஓட்டப்பந்தய வீரனோ அல்லது குத்துச் சண்டை வீரனோ அவனுக்கு கடைசி ஓட்டம் அல்லது கடைசி மணித்துளிகளில் கொடுக்கப்பட வேண்டிய கடும் முயற்சியைத் தான் இது குறிக்கிறது.

நான்காவதாக, குறிக்கோளுடன் உயர்வை அடைதல் என்ற பதத்தைக் குறிக்கிறது. இது எதை காண்பிக்கிறது என்றால், நமக்கு முன் வைக்கப்பட்டிருக்கிற கீரிடத்தை

அடைவதற்கு கிறிஸ்தவ மக்கள் ஒப்புக்கொடுத்தல் உள்ளவர்களாய் பணிசெய்ய வேண்டும் என்பதைக் காண்பிக்கிறது.

இவ்விதமான பதங்கள் பல இடங்களில் உழைக்கும் சபையைக் குறித்து ஆணித்தரமாகக் கூறுகிறதாய் இருக்கிறது.

ஒரு சபையானது சுவிசேஷத்திற்காக ஆர்வமாய் உழைப்பதிலும், தங்கள் சாட்சியைக் காத்துக் கொள்ளுவதிலும் தீவிரமாய் இருப்பதைக் காணும் பொழுது, அது ஒரு மகிமைகரமான காட்சியாக இருக்கும். ஆம், செய்யப்பட வேண்டியது அதிகமாக இருக்கிறது. போதகர்களும், மூப்பர்களும் தொடங்கி வைப்பவர்களாகவும், தேவப்பிள்ளைகளை உற்சாகப்படுத்துகிறவர்களாயும், வாலிபர்களை பயிற்சியளிக்கிறவராகவும், பணியை அமுல்படுத்துகிறவர்களாகவும் காணப்படவேண்டும்.

ஞாயிறு பள்ளி பணிகளும், அதற்கு சம்மந்தப்பட்ட கூட்டங்களும் இருக்கிறது. வீடுகள் சந்திப்பு ஊழியத்தை ஒழுங்காக நடத்தி, அதற்கு கொடுக்க வேண்டிய கனத்தைக் கொடுத்து, செயல்படுத்த வேண்டிய பணிகள் உண்டு.

பல்வேறு பணிகளுக்கு விசுவாசிகளை வழிநடத்துவதற்கு தானாக முன்வந்து செய்கிற குணத்தை உற்சாகப்படுத்த வேண்டும். ஒருமுறை சபையானது, வாஞ்சையோடு முன்வந்து செய்கிற பணியில் முன்னேறிச் செல்லுமானால், மற்ற தேவப்பிள்ளைகள் இடத்திலும், மக்களுடைய இருதயத்திலும் இந்த வாஞ்சையானது பரவி அதற்கேற்ற உண்மையான பலனை நாம் பார்க்கமுடியும். நாம் உழைக்கும் சபைகளைக் கட்டுவோம். இதுவே வளந்தேறுகிற சபை. இதுவே ஒரே இருதயத்தோடு கூடிய மக்களைக் கொண்ட சபையாய், பின்வரும் பிரான்சிஸ் ரிட்லி அவர்கள் எழுதின அழகான பாடல் வரிகளுக்கு ஏற்ப அமைந்த சபையாய் இருக்கிறது.

இயேசு எஜமானே, நான் உம்முடையவன்
உமக்கு சொந்தமாக வாங்கப்பட்டவன்
உம் இரத்தத்தினாலே, ஓ! மாசற்ற ஆட்டுக்குட்டியே
எனக்காகவே மனப்பூர்வமாய் சிந்தினீரே
என் இருதயம் உம் சொந்தமாகட்டும்
என் வாழ்வு உமக்காகட்டும்.

மற்றவைகளுக்கு நான் நீண்ட காலம் உழைத்துவிட்டேன்
இப்பொழுது, உமது நாமம் மட்டும் சுமந்து,
உமது இனிய சத்தத்திற்கு கீழ்ப்படியவும் என்னுடைய தினசரி,
ஒவ்வொரு நேர விண்ணப்பமாயிருக்கிறது.
உம்மைத் தவிர எனக்கு வேறே சந்தோஷமில்லை.
இயேசு எஜமானே, உமக்கே ஊழியம் செய்வேன்.

மிகுந்த பலவீனமும், அற்பமானவனாயும் இருந்தாலும்,
என் கையையும், இருதயத்தையும், நரம்பையும் பலப்படுத்தும்.
நீர் கட்டளையிடும் அனைத்தும் நிறைவேற்றுவதற்கே.
எனக்காக நீர் கொண்டிருக்கும் எல்லாப் பணிகளை பார்ப்பதற்கு,
என் கண்களை திறந்தருளும் இயேசு எஜமானனே,
நீர் என்னைப் பயன்படுத்துவீரா? எல்லாவற்றைக்
காட்டிலும் உம்மையே சொந்தமாக ஏற்றுக்கொண்டவனை.

உம் சித்தத்தின்படி, என் சித்தத்தின்படியல்ல;
உம் அழைப்பை மாத்திரம் என் காதுகள் கேட்கட்டும்.
இயேசுவே நான் எப்பொழுதும் உம் பணியில்
சந்தோஷமாயும், மனப்பூர்வமாயும் இருக்க என்னை நடத்திடும்.

இந்த நூலின் ஆசிரியர் எழுதின “தேவனுடைய பணியில் உமது நியாயமான பங்களிப்பு” என்ற புத்தகத்தில் உழைக்கும் சபையைக் குறித்தான இன்னும் மேலான சத்தியங்களைக் கண்டுகொள்ளலாம்.

# 5. கற்றுக்கொள்ளும் சபை

பல்வேறு குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு, அவருடைய ஆசீர்வாதத்தில் அமைந்த ஒரு சுவிசேஷ சபையானது தேவனால் வடிவமைக்கப்பட்ட அற்புதமான அமைப்பாகும். இதுவே, அநேக இருதயங்களை வெல்லுவதற்கு ஒரு சேனையாய், ஆத்துமாக்களின் நலனைப் பார்த்துக் கொள்வதற்கு ஒரு மருத்துவமனையாக இருக்கிறது. ஆம், ஆராதனை, ஜெபம், பரிசுத்தமாகுதல், ஆவிக்குரிய உழைப்பு, ஐக்கியம் மற்றும் தேவனுடைய காரியங்களில் மகிழ்வு அடைகிற ஒரு சமுதாயமாக காணப்படுகிறது. அதே சமயத்தில் ஒருபோதும், மறக்கமுடியாத, தவிர்க்கமுடியாத ஒரு முக்கியமான பணியானது, ஸ்தல சபைக்கென்று நியமிக்கப்பட்டிருக்கிறது. இது இல்லையென்றால், எந்தவித முன்னேற்றமோ அல்லது நிலையான ஒன்றோ காணப்படமுடியாது.

இதுவே ஒரு உண்மையான வெற்றியுள்ள சபை கட்டுவதற்கு ஐந்தாவது கொள்கையாக அமைகிறது. நாம் சிந்தனைப்பூர்வமாக ஒரு கற்றுக்கொள்ளும் சபையாக உழைக்கவேண்டும். விசுவாசிகள் கிறிஸ்துவுக்குள் வளர்வதற்கும், ஒரு பரிபூரணமான மனிதனாக, தேவனுடைய குமாரனுடைய அறிவில் கட்டப்படுவதற்கும், அவர்களை தேறினவர்களாக ஆக்குவதற்கும், போதகர்களும் ஆசிரியர்களும் கொடுக்கப்பட்டுள்ளனர் என்று பவுல் குறிப்பிடுகிறார். மேலும் பவுல் "சகலமும் பக்தி விருத்திக்கேதுவாக செய்யப்படக்கடவது" என்றும் கூறுகிறார். மேலும் ஒரு போதகர் எல்லாப் பொறுமையோடு கூடிய உபதேசத்தோடு தேவனுடைய வார்த்தையை போதிக்கவேண்டும் என்றும் அவர் சொல்லுகிறார். வேதத்தில் நிறைய இடங்களில், கற்றுக்கொள்ளும் தன்மையை பவுல் வலியுறுத்துகிறார்.

சுவிசேஷ சபை ஒரு கல்லூரியாகக் காணப்படுகிறது. இது தொண்டு, அன்பு, நல்ல குணங்கள் இல்லாத வெறும் அறிவுப்பூர்வமான விசுவாசிகளை உருவாக்குவதோ, தவறான போதனைகளை மேம்படுத்துகிறதான ஒன்றாக அல்ல. மாறாக, தேவனுடைய வார்த்தையில் அடங்கியுள்ள அதிசயங்களையும், பொக்கிஷங்களையும், அவருடைய திட்டங்களையும் தெளிவாக விளக்கப்படுத்துகிறதாயும், ஆராய்ச்சி செய்கிறதாயும், அவ்வார்த்தையை வாஞ்சையோடு கேட்கிற மக்கள் கூடுகிற இடமான ஒரு உண்மையான சபையாக இருக்கிறது. நாம் இதை ஏன் கல்லூரியாக அழைக்கிறோம் என்றால், ஒரு சில தகுதிகளை அடைய உச்ச நிலையை நோக்கிச் செல்லுவதற்கு, முறையாக கற்றுக்கொள்ளும் திட்டத்தை வைத்திருப்பதினால் தான். உண்மையாக சொல்லப்போனால் சபையில் எவ்வித பயிற்சிகளோ, தேர்வுகளோ, பட்டங்களோ இல்லாததினால், கல்லூரிக்குண்டான சூழல் மிகச் சிறிய அளவில் மாத்திரமே இருக்கும். ஆனாலும் போதிக்கிறவர் தெளிவான நோக்கமுள்ளவராய், அவ்வப்பொழுது தன்னுடைய பாடத்திட்டத்தில், தேவனுடைய அனைத்து ஆலோசனைகளையும் இணைத்துச் செயல்படவேண்டும். சபைமக்களும், தாங்கள் ஒரு தெய்வீகமான ஞானம் அடங்கிய மகத்தான பாடத்தை அடைகிறோம் என்ற உணர்வோடு அதற்குண்டான தலைப்புகளையும், கருப்பொருளையும், பாடத்தையும் தங்கள் முன்வைத்து பெரும் மகிழ்ச்சி அடைவர்.

சில நேரங்களில், மக்கள் ஆச்சரியமூட்டும் சத்தியங்களைக் கற்றுக்கொள்ளுவதற்கு தங்களை ஈடுபடுத்திக்கொண்டாலும், அவர்கள் அதைக்குறித்தான உணர்வற்றவர்களாக இருக்கும்பொழுது, என்ன ஒரு பரிதாபத்திற்குரிய காரியமாய் இருக்கிறது. ஆம்! பிரசங்கங்கள் வெறும் பிரசங்கமாகவே இருக்கிறது. வேத ஆராய்ச்சி கூட்டங்கள் வெறும் வேத ஆராய்ச்சி கூட்டங்களாகவே

இருக்கின்றன. அதைக்குறித்தான விளக்கங்களோ, தொடர்ச்சியோ இல்லை. அதை விளக்குவதற்கு ஏதுவாக ஒரு வரைபடமோ உருவாக்கப்படவில்லை. போதிக்கிற போதகரும் எசேக்கியல் புத்தகத்தை எடுத்துக்கொண்டு, மாதக்கணக்கில் அல்லது வருடக்கணக்கில் வெறுமையாக போதித்துக்கொண்டு இருப்பவராகவும், அதை முடித்துவிட்டார் என்றால், எந்தவித காரணமுமின்றி அடுத்த ஒரு புத்தகத்திற்கு செல்லுபவராகவும் இருப்பார்.

கற்றுக்கொள்ளும் சபையானது மிகவும் வித்தியாசமான ஒன்றாக இருக்கிறது. ஏனென்றால், அது தெளிவான நோக்கமும், முன்னேற்றமும், நிறைவேற்றுதலும் கொண்டதாக இருக்கிறது. போதகரும் பாடத்திட்டங்களை வெளியிடுவதற்கு கனவுகாணாமல், அனைவராலும் ஏற்றுக்கொள்ளுகிற சத்தியங்களையும், பாடங்களையும், தெளிவாகவும், சுலபமாகவும் போதிக்கிறவராக மாத்திரமல்ல தேவனுக்கும், அவ்வார்த்தையை கேட்கிற சபை மக்களுக்கும் தாம் கடமைப்பட்டவராய், பொறுப்புள்ளவராய் இருக்கிறார் என்று உணர்ந்து செயல்படுகிறவராக இருப்பார். அவர் தன்னுடைய பாடத்தில் உண்மையாகவும், முழுமையாகவும் செயல்பட வாஞ்சிப்பார். மேலும் அவர் தேவனுடைய வார்த்தையையும், அவ்வார்த்தைக்கு தங்களை அர்ப்பணித்துக் கொண்ட பரம ஆசானுடைய மாணாக்கர்களை மதிக்கிறவராகவும் இருப்பார்.

போதகரானவர் தான் செய்கிற எல்லா செயல்பாடுகளைக் குறித்து தணிக்கைப் பட்டியல் (Check list) வைத்து செயல்படுகிறவராக இருக்கிறாரா? என்னவிதமான உபதேசங்களை அவர் பிரசங்கம் செய்திருக்கிறார்? என்னவிதமான புத்தகங்களை அவர் படித்திருக்கிறார்? என்னவிதமான நடைமுறை சத்தியங்களை கற்பித்து இருக்கிறார்? என்னவிதமான தியானப் பகுதிகளை எடுத்து

உற்சாகப்படுத்தியிருக்கிறார்? இன்றையக் காலங்களில் இருக்கிற தவறான போதனைகளை சபை மக்களுக்கு காண்பித்து, விசுவாசத்தை தற்காத்து இருக்கிறாரா? அவ்வப்பொழுது, தான் கற்பிக்கும் போதனைகளை தனிப்பட்ட விதத்தில் சரிபார்த்து இருக்கிறாரா? வேத ஆராய்ச்சி பாடத்தில் கலந்துகொள்ளுகிற சபை மக்கள், வேதத்தின் அநேக பகுதிகளின் விளக்கங்களுக்கு செல்லமுடியாமல், ஒன்றைக் குறித்து மாத்திரமே விளக்கிக்கொண்டு இருக்காதபடி, வேதத்தில் உள்ள ஒரு புத்தகத்தை எடுத்து தியானிக்கும் நேரத்தை குறித்து விழிப்பாய் இருக்கிறாரா?

இந்த புத்தகத்தின் ஆசிரியருக்கு ஒரு போதகரைக் குறித்து ஞாபகம் வருகிறது. அந்த போதகர் சந்தித்த வருத்தமான விஷயம் என்னவென்றால், தான் நடத்தி வந்த வேத பாட ஆராய்ச்சி கூட்டத்தின் நேரத்திலே, பக்கத்தில் உள்ள பெந்தகொஸ்தே சபையானது சிறப்பு பயிற்சி பள்ளி நடத்துவதாக கூற, இங்கு வேதப்பாட ஆராய்ச்சி கூட்டத்திற்கு வந்துகொண்டிருந்த அனைத்து மக்களும் நோட்டு, பேனா சகிதமாக அங்கு சென்றுவிட்டனர். அப்பொழுதுதான் பாதிக்கப்பட்ட போதகர், தன்னுடைய சபை மக்கள், அவர் ஒரு வேத பாட ஆராய்ச்சி கூட்டம்தான் நடத்துகிறார் என்று அறியாதவர்களாக இருக்கிறார்கள் என்று உணர்ந்தார். உடனே எல்லாவற்றையும் ஒழுங்குபடுத்தி, தன்னுடைய போதனைகளை சரியாக மாற்றியமைத்தார். பின்னர் கலந்து கொள்ளுபவர்களுக்கு குறிப்பு புத்தகங்கள் கொடுத்து, தன் போதனைகளை அர்த்தமுள்ளதாகவும், நோக்கமுள்ளதாகவும் காணப்படச் செய்தார். அவரின் வேத பாட ஆராய்ச்சிக் கூட்டமானது புது வாழ்வு பெற்றது.

இங்கே நாம் கற்றுக்கொள்ளுவது என்னவென்றால், முக்கியமாக விலைமதிப்புள்ள போதனைகளை சபை மக்கள் எளிதாக அறிந்து கற்றுக்கொள்ள வேண்டும். விசுவாசிகளுக்கு

கற்றுக்கொள்ளும்படியான ஒரு மகத்துவமான திட்டம் வழங்கப்பட்டு வருகிறது என்று எளிதில் தெரியும்படியாக இருக்கவேண்டும். நாம் மறுபடியுமாக சொல்லுகிறோம், இவ்வகை செயலானது ஒரு பள்ளிக்கூடமோ அல்லது கல்லூரியோ செயல்படுவதாக உணர வேண்டிய அவசியமில்லை. இங்கே ஒரு பெரிய வித்தியாசமுள்ளது. போதகருடைய மனதில் ஒரு தெளிவான, முறையான, மனசாட்சியின் நியதிப்படி, செயல்முறையானது வேலை செய்து கொண்டிருக்கிறது என்று சபை மக்கள் உணரப்பட வேண்டும். கற்றுக்கொள்ளும் சபை உருவாக்குவதில், சபையின் செயல்பாடுகள், தெளிவாக, அறிந்து கொள்ளக்கூடிய விதத்தில் நடைபெறுவதிலேயே சார்ந்திருக்கிறது.

அநேக காரணங்கள் கூட ஒரு கற்றுக்கொள்ளும் சபை உருவாக்குவதில் முக்கிய காரணிகளாக இருப்பதாய் குறிப்பிடலாம். நாம் போதிக்கிற பாடங்கள் நன்கு விளங்கிக் கொள்ளக்கூடியதாக இருக்கவேண்டும். எப்பொழுதும் எல்லோரும் தேவனுடைய ஆழமான சத்தியங்களில் மகிழ்ச்சி அடைவதற்கு, போதகரானவர் தெளிவுபடுத்திச் சொல்லுவதை வளர்த்துக் கொள்ளவேண்டும்.

மேலும், கற்றுக்கொள்ளும் காரியம் அதிகமாக பிரயோஜனமான ஒன்றாக காணப்படவேண்டும். அது தனிப்பட்ட நபருக்கோ அல்லது சபைக்கோ, எவர்களுக்கு பொருத்தமாக இருந்தாலும், அது சவால் மிக்கதாகவும், உற்சாகமளிக்கிறதாகவும், கேட்கிறவர்களை பெலப்படுத்துகிறதாகவும் இருக்கவேண்டும். அறிவுப்பூர்வமான போதனைகள் ஒரு குறிப்பிட நபர்களுக்குத் தான் போய் சேருகிறது. கற்றுக் கொள்ளுபவைகளை நினைவில் வைத்துக்கொள்ளும் வண்ணமாகவும், மகிழ்ச்சியளிக்கும் விதமாகவும் இருக்க வேண்டும். ஒரு கிறிஸ்தவ போதகரானவர், உலகத்தில் உள்ள அற்புதமான,

உன்னதமான ஆக்கங்களை பயன்படுத்துகிறதாய், அவற்றில் உள்ள உள்ளார்ந்த, வல்லமையான கருத்துக்களைத் தோண்டி எடுத்து கேட்கிறவர்கள் மனதில் பதியும்படியாகவும், அவர்களை அசரச் செய்கிறவராயும் இருப்பார்.

முந்தைய நாட்களில் இராணுவ வீரர்கள் தங்களுடைய சாப்பாட்டு அறையில் பரிமாறப்படும் சுவையான பதார்த்தங்களின் பட்டியலானது வெளியே ஒட்டியிருப்பதை நின்று ஆவலுடன் பார்ப்பதை நினைவுகூர முடியும். போதகர்களாகிய நாம் ஆவிக்குரிய உணவை எப்படி தயாரித்து பரிமாறுகிறவர்களாக காணப்படுகிறோம். நம்முடைய சபையின் மக்கள் ஆண்டவருடைய குணநலன்களை ருசிபார்க்கக் கூடியதாயும், கோட்பாடுகள், வாக்குத்தத்தங்கள், சுய சரிதைகள், எச்சரிப்புகள், ஆறுதல்கள், உற்சாகங்கள் மற்றும் உதாரணங்கள் ஆகியவைகளை விளங்கிக்கொள்ளும்படியாக காணப்படுகிறதா? எல்லா சூழ்நிலைகளிலும் அவர்கள் வேதாகமத்தில் உள்ள புத்தகங்களின் நோக்கங்களை அறிந்துகொள்ளுகிறார்களா? பெரிய கோட்பாடுகளின் பெயர்களையும் அதின் அவசியத்தையும் அறிந்துகொண்டுள்ளார்களா? தற்போதைய சாத்தானுடைய குற்றசாட்டுகளுக்கு எதிராக நிரூபணமாக்கப்பட்டவர்களாக இருக்கிறார்களா? ஒவ்வொரு புதிய வருடத்திலும் பின்வரும் பாமாலை எழுத்தாளர் எழுதின பாடலைக் கொண்டு ஜெபிக்கிறவர்களாக இருக்கிறார்களா?

எமக்கு அனுமதியும் எமக்கு உதவிசெய்யும்
புதிய வெளிச்சத்தின் பிம்பங்களை
உமது புதிய பாதைகளை கண்டறிய
உமது மகத்துவத்தின் புதிய காட்சியை
உமது கிருபையின் புதிய சந்திப்புகளை அறிய

புதிய சத்தியத்தின் உச்சநிலையை அடைய
புதிய பழம்பெரும் சத்தியத்தைப் பற்றிக்கொள்ள
ஒவ்வொன்றும் ஆழமான தெய்வீகமும், மிகுந்த ஆச்சரியமும்
ஆராய்ந்து பார்க்கக் கூடியதாய் இருக்கிறதால்.

- தாமஸ் ஹார்ன்ப்ளோவர் கில்

தாங்கள் பங்கேற்கும் ஊழியமானது தற்செயலாகவும். குழப்பத்திற்குள்ளானதாகவும் காணப்பட்டது அல்ல என்றும், அது தேவனுடைய திட்டத்தை வெளிப்படுத்துகிற மனத்தெளிவோடு கூடிய உன்னத பணியாயிருக்கிறது என்றும் உணர்ந்து இருக்கிறார்களா? ஆம்! நாம் மனத் தெளிவோடு ஒரு கற்றுக்கொள்ளும் சபையை உருவாக்குவதற்கு நுகம் கொண்டவராக இருக்கவேண்டும்.

# 6. சுவிசேஷ சபை

பிரிட்டனில் கடந்த ஐம்பது ஆண்டுகளில் கணக்கிலடங்காத சபைகள் சுவிசேஷத்திற்கு தூரம்போனதாகவும் அல்லது ஒட்டுமொத்தமாக மூடப்பட்டதாகவும் காணப்படுகின்றன. அது மாத்திரமல்ல, மீதியிருக்கும் உண்மையான அநேக திருச்சபைகளிலும் குறைந்த ஆத்துமாக்களே உள்ளனர். சிலர் பீதியடைந்தவர்களாக, மாயமாலத்திற்கும், உணர்ச்சிகள் அடங்கிய ஆராதனைகளுக்கும், பொழுதுபோக்கு சுவிசேஷத்திற்கும் இணங்கிப் போனவர்களாக, அது அவர்களை இரட்சிக்கும் என்று நம்பிக்கையுள்ளவர்களாக வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். மற்றவர்கள் அதின் வருத்தகரமான முடிவுக்கு பொறுமையோடு காத்திருப்பவர்களாக இருக்கின்றனர்.

ஆனால் போதகர்களும், அலுவலர்களும், சபை மக்களுக்கு ஒரு எழுச்சியுள்ள சுவிசேஷப்பணியைக் குறித்து, அதில் இருக்க வேண்டிய ஒப்புக்கொடுத்தலையும், தாகத்தையும் குறித்து வைராக்கியத்தோடும், விசுவாசத்தோடும் வளர்ந்திருப்பார்களே என்றால், இவ்விதம் ஆகாது. ஆம்! ஒவ்வொரு போதகர்களின் அதிமுக்கியமான நோக்கம் ஜீவவசனத்தைப் பிடித்துக்கொண்டு, ஆத்தும தாகத்தை உடைய சபை ஐக்கியத்தை உருவாக்குவதே ஆகும். போதகரும், சபை மக்களும் பவுலைப் போல சொல்லுவார்களேயானால் அது பெரிய சாதனையாக இருக்கும். "அது என்மேல் விழுந்த கடமையாயிருக்கிறது; சுவிசேஷத்தை நான் பிரசங்கியாதிருந்தால், எனக்கு ஐயோ" (1 கொரி 9:16). ஆண்டவர் கொடுத்த பிரதான கட்டளையின்படியாக, இது நம்முடைய பாரமாக இல்லையா? அப்போஸ்தல

நடபடிகளில் சொல்லப்பட்ட வண்ணமாக, இது நமக்கு முன்வைக்கப்பட்ட அதிமுக்கியமான கடமையில்லையா? பிறகு ஏன் ஆத்துமாக்களை ஆதாயம் பண்ணவேண்டும் என்ற வாஞ்சை இல்லாதபடிக்கு ஆண்டவரையே புறக்கணித்தவர்களாய் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்? ஏன் விசுவாசிக்கிற ஆத்துமாக்களை, மரித்துக்கொண்டிருக்கிற உலகத்தில் அவர்களுடைய சபையானது தேவனுடைய ஒளியாய் இருக்கிறது என்று ஊக்குவிக்க தவறவிட்டவர்களாக இருக்கிறோம்? சுவிசேஷப் பணியை வளர்ப்பது மாத்திரம் இல்லாமல், அப்பணிக்கென்று ஒவ்வொருவரும் தங்களை அடையாளப்படுத்திக் கொள்ளுவதே முக்கிய நோக்கமாக இருக்கவேண்டும். ஒவ்வொரு சபையும் சுவிசேஷப் பணியில் தனித்தன்மை கொண்டதாய் இருக்கவேண்டும். ஓய்வு நாளில் ஒரு ஆராதனையாவது சுவிசேஷப் பிரசங்கத்தைக் பிரசிங்கிக்கிற வேளையாக அமைந்திருக்கவேண்டும். இந்த நூலின் ஆசிரியரும் கூட இதைக் குறித்து அடிக்கடி வற்புறுத்துவதுண்டு. "சுவிசேஷத்தை நான் பிரசங்கியாதிருந்தால், எனக்கு ஐயோ" என்று இவ்வார்த்தைகளைப் பவுல் எழுதும்பொழுது, அவர் ஆத்துமாவை இரட்சிக்கும் சத்தியமாகிய நற்செய்தியைக் குறிப்பிடுகிறார்.

சபையில் சிறுவர் சுவிசேஷப் பணிகள் இருக்கவேண்டும். அதாவது, தெளிவான ஆத்தும ஆதாயத்தின் முக்கியத்துவம் இல்லாத சபையில் அங்கத்தினரின் பிள்ளைகளுக்கு மாத்திரம் ஞாயிறு பள்ளி என்று இல்லாமல், சபையின் அருகாமையில் உள்ள அனைத்து சிறுவர்களையும் எந்த அளவுக்கு அதிகமாக சந்தித்து செயல்படுகிறோமோ அவ்வளவுக்கு நல்லது. அவ்வண்ணமாகவே ஞாயிறு பள்ளியானது செயல்பட வேண்டும். தனிநபர் சாட்சிக்கு (Personal Witness) தொடர்ச்சியாக உற்சாகம் கொடுக்கவேண்டும். வீடுகள் சந்திப்பு, கைப்பிரதிகள் விநியோகம் செய்தல், மேலும் ஆத்துமாக்களை சபையின் ஐக்கியத்திற்குள்ளாக

கொண்டுவரும் வண்ணமாக, எப்படியெல்லாம் சத்தியத்தைப் பிரஸ்தாபப்படுத்தி ஆதாயம் பண்ணமுடியுமோ அப்படியெல்லாம் செய்ய வேண்டும். நம்முடைய சபை எவ்வாறு போய்க் கொண்டிருக்கிறது? ஒரு போதகன் தன்னுடைய சபையை நல்வழியில் கட்டவேண்டும் என்று வாஞ்சிப்பார் என்றால், முக்கியமாக சுவிசேஷப் பணியைக் குறித்ததான நான்கு முக்கிய அம்சங்களைக் கருத்தில் கொள்ளவேண்டும்.

*1.* சபையில் ஒவ்வொருவருக்கும் சுவிசேஷப் பணியைக் குறித்து, அதிமுக்கியமான பொறுப்பு என்றும், இப்பணிக்கென்று அழைக்கப்பட்டவர்கள் என்றும், தேவனிடத்திலிருந்து பெறப்பட்ட முக்கிமான கட்டளை என்றும், பாரமான உணர்வு கொண்டவர்களாக உணர்ந்து செயல்படவேண்டும். இதுவே நாம் வாழ்வதற்கான முக்கிய காரணங்களில் ஒன்றாக இருக்கவேண்டும். சபைகளாக நாம் நிற்பதும் அல்லது விழுவதும் எதினால் இருக்கிறதென்றால், நம்முடைய இரட்சகரைப் பிரியப்படுத்துகிற விதத்தில், ஆத்தும ஆதாயம் செய்யும் பணியில் தான் இருக்கிறது. ஆம், நிச்சயமாக நம் சாட்சி தவறும்பொழுது நமக்கு வருகிற தண்டனைக்குக் குறித்து நாம் பயப்படுகிறவர்களாகக் காணப்படவேண்டும். தேவன், நாம் அவருக்கு கீழ்ப்படிகிறோமா இல்லையா என்பதைக் கவனித்துக் கொண்டிருக்கிறார். நான் ஒரு போதகனாக இருந்தால், நான் என்னைப் பார்த்துக் கேட்டுக்கொள்ள வேண்டிய கேள்வி, தேவனுடைய மக்கள் தங்களிடத்தில் உள்ள மேலான உத்திரவாதத்தை ஊக்கப்படுத்தும் வண்ணமாக, நான் என்ன செய்கிறேன் என்பதே ஆகும்.

*2.* பொறுப்புணர்வுக்கு மேலாக, ஒவ்வொரு உண்மையான சபையும் சுவிசேஷப் பணியில் ஒரு கருவியாக செயல்படுவதில் நேர்மையான தாகத்தை உடையவர்களாக

சபை அங்கத்தினர் அனைவரும், சபையில் உள்ள அனைத்து துறைகளின் வளர்ச்சியைக் கூர்ந்து கவனிப்பவர்களாகவும், இரட்சிக்கப்படாத ஆத்துமாக்களுக்காக பாரத்தோடு ஜெபிக்கிறவர்களாகவும் இருக்க வேண்டும். நாம் செயல்படுவதில் கொண்டுள்ள தாகமானது, இரட்சிக்கப்படாத ஆத்துமாக்களுக்காக கொண்டிருக்கும் ஆழமான பாரத்தைக் குறிக்கிறது. போதகர்கள், தொடர்ந்து ஆத்தும பாரங்கொண்டவர்களாக காணப்படுவதற்கு மன்றாடி ஜெபிக்கவேண்டும்.

*3. சபைகள், சுவிசேஷத்தின் இலவசமான இரட்சிப்பைக் குறித்து குழப்பமற்ற தெளிவான பார்வையைக் கொண்டிருக்கவேண்டும்.* அல்லது சுவிசேஷப் பணியில் உள்ள ஆர்வமானது குழப்பத்தினால் பாதிப்புக்குள்ளாகிவிடும். சர்வ வல்லமையுள்ள தேவன் மறுபிறப்பில் இரட்சிப்பின் கிரியையை ஆரம்பிக்கிறவராகவும், சுவிசேஷ வார்த்தையினால் பாவிகள் மனந்திரும்புதலை வாஞ்சிக்கிறார் என்பதை ஒவ்வொருவரும் தெளிவாக அறிந்திருக்கிறார்களா? நம்பத்தூண்டும் பிரசங்கம் வெளிப்புறக் காரணியாக இருக்கிறது. ஆனால், பரிசுத்த ஆவியானவரே, ஆத்துமாக்கள் வார்த்தையைக் கேட்பதற்கும், கீழ்படிவதற்கும் இணங்கச் செய்பவராக இருக்கிறார். இரட்சிப்பு ஒரு சுயநினைவற்ற அனுபவம் கிடையாது. சீர்திருத்த சத்தியத்தை அறிந்த மக்கள் ஏன் ஹைபர் கால்வினிசம் போதுமான தன்மையற்றதாகவும், தவறானதாகவும் இருக்கிறது என்று அறிந்திருக்கிறார்களா? கிருபை மிகுந்த, உணர்த்தும் தன்மையுள்ள இரட்சிப்பானது தனிப்பட்ட ஆத்துமாக்களுக்கு பாதிப்பை உண்டக்குகிறதும் புரிந்துகொள்ளப்படுகிறதாகவும், நேசிக்கப்படுகிறதாகவும் இருக்கிறதா? இவைகளில் குழப்பம் இருக்குமென்றால் சுவிசேஷப் அழைப்பானது விரைவில் இரகசியமாக அழிக்கப்பட்டுவிடும்.

4. மேலும் ஒரு சுவிசேஷ சபையானது கிறிஸ்துவுக்குள் புது விசுவாசிகளை உண்மையாக அரவணைக்கிற, ஏற்றுக்கொள்ளுகிற, பொறுமையாகப் பராமரிக்கும் ஆர்வம் கொண்டதாக காணப்படவேண்டும்.

இவ்விதமான எல்லா நற்பண்புகள் அனைத்தும் போதகர் மற்றும் அலுவலர்களிடத்தில் இருந்து ஆரம்பமாகிறது. ஒரு போதகனோ அல்லது ஆளுகை செய்கிறவர்கள் எவர்களோ, அவர்கள் எக்காரணத்தைக் கொண்டும் எந்தவிதமான சுவிசேஷப் பணிக்கும், கடின இருதயமுள்ள மனுஷனையோ அல்லது ஆத்தும ஆதாயத்தில் வாஞ்சையற்ற எந்த மனுஷனையோ நியமிக்கக்கூடாது. தளராத முயற்சியினாலும், வைரக்கியத்தினாலும் ஆதரவினாலும் ஐக்கியத்தை பயிற்சிக்குள்ளாக்கி, உண்மையான சுவிசேஷத்தின் வல்லமைக்குள் நம்முடைய சபையை கொண்டுவருவதற்கு நம்முடைய கொள்கை என்னவாக இருக்கிறது? ஒரு சரியான மனப்பாங்கில் சபையை வழிநடத்தாத ஒரு போதகன் சீக்கிரத்தில் தனியாய் போராடுகிறவனாக, சோர்ந்து போகிறவனாக, ஜெபிக்கப்படாதவானாக, உண்மையான மந்தையினால் ஆதரிக்கப்படாதவனாகக் காணப்படுவான். ஆனால், மெய்யான சத்தியத்தைப் போதித்து சரியான பாதையில் நடத்தி ஆத்தும ஆதாயம் செய்கிறவன் ஒரே மனதோடு கூடிய ஐக்கியத்தை ஏற்படுத்துவான்.

பாமாலை எழுத்தாளர் சார்லஸ் வெஸ்லி பின்வரும் தன் பாடலில் வெளிப்படுத்தியுள்ள வாஞ்சைகள் நம்முடையதாகட்டும்.

இப்பொழுது இரட்சகரே உமதன்பை தெரிவியும், ஒப்புக்கொடுக்கப்பட்ட ஒவ்வொரு இருதயத்தை ஆண்டு கொள்ளும், உம்சித்தத்தின்படியாக எங்களை பொருந்தச்செய்யும், கிருபையின் சத்தியத்தில் ஆழமாய் வேரூன்றப்பட எழும்பிக்கொண்டிருக்கிற சபையைக் கட்டும், மலையின் மேல் இருக்கிற பட்டணமாக வைத்திடும்.

ஓ! தேவனே, உம்மை நீரே வெளிப்படுத்தினவராய்
எம் இருதயங்கள் மிகுந்த வாஞ்சையோடு
உம் சுவிஷேசத்தை பிரஸ்தாபிக்கட்டும்
உம் மகிமைக்காக மட்டுமே செயல்பட

ஓ! எம் செயல்களின் ஆரம்பமும் முடிவும்
இயேசுவின் நாமத்திலே செய்யப்படுவதாக.
நீர் ஆசீர்வதித்தாலொழிய, தேவனே,
எம் சிறந்த பிரயாசங்களும், உழைப்புகளும் விருதா
எதையும் வெற்றிக் கொள்ளவும் முடியாது.

எம் எல்லாபெலமும் எவற்றுக்குமில்லாமல்,
எம்பணிகள் அனைத்தும் உமக்கே செலவழிப்போம்.
நிச்சயமாக உம்மால் அவைகள் ஆசீர்வதிக்கப்படும்.
இப்பொழுது, எம் விசுவாசத்தையும்,
அன்பையும் பெருகச் செய்யும்.

ஓ! எங்கள் வாழ்வு அனைத்து இடத்திலும் கண்ணை
பறிக்கும் பிரகாசமுள்ள ஒளியைப்போன்று இருக்கட்டும்.
நாங்கள் பெற்ற ஆசீர்வாதத்தையும் அவர்கள் பார்க்கவும்,
அவர்களுக்குண்டான யாவும் உமக்குள் வந்து தேடுவதற்கும்
நீரே இரட்சிக்கும் தெய்வீக ஒளி.

# 7. பிரிக்கப்பட்ட சபை

ஒவ்வொரு காலக்கட்டத்திலும் கிறிஸ்துவின் சபையானது, கள்ள போதகத்தை பறைசாற்றுகிற அல்லது பின்பற்றிப் போகிற மக்களோடு தொடர்பு கொண்டதால், கறைபட்டு முடிவில் சுவிசேஷத்தின் தூய்மையை பாதித்துவிடுகிறதாய் இருக்கிறது. பிரிட்டனில் கடந்த நூற்றாண்டானது, சத்தியத்தை விசுவாசிக்கும் திருச்சபைகளுக்கு கொடிய இழப்பின் காலங்களாய் காணப்பட்டது. அதில் முதலாவதாக, ஆயிரக்கணக்கான புரோட்டஸ்டன்ட் பிரிவினர்களின் சபைகள் பலியாயின. அதினால், இப்பொழுது ஒருசில உண்மையான சுவிசேஷ சபைகள் மாத்திரமே அதில் மீதியுள்ளன. இவ்விதமான சூழ்நிலைகளில் இவர்களிடமிருந்து வேதத்தை விசுவாசிக்கும் சபைகள் பிரிந்துவர மனமற்றவர்களாக காணப்பட்டனர்.

தவறிழைக்கும் சபைகளோடு கூடிய ஐக்கியமானது, அவர்களுடைய மரணத்திற்கு ஒத்ததாக இருக்கிறது. அவர்களுடைய வாலிப மக்கள் லிபரல் இறையியல் கல்லூரிக்கு சென்றார்கள். அவர்களுடைய சொத்துக்களும், வஸ்துகளும் இறையியல் எதிரிகளின் கைகளுக்கு போனது. இன்றைக்கு, சத்துருவானவன் எஞ்சியிருக்கும் எல்லா சத்தியத்தையும் அழிப்பதற்கு வேறுவிதமான, வித்தியாசமான திட்டத்தோடு பிரச்சாரம் பண்ணிக்கொண்டிருக்கிறான். லிபரல் இறையியல் கொள்கையின் அவிசுவாசத்தை தெளிவாக, புரிந்துகொள்ளுகிற விதத்தில் காண்பிக்கிறதை விட்டுவிட்டு அவனுடைய சொந்த, தந்திரமான புதிய சுவிசேஷத்தை உட்புகுத்துகிறான். பலவீனமான பார்வை கொண்ட இரட்சிப்பை மற்றும் தேவ ஆவியானவரால் வெளிப்படுத்தப்பட்ட அதிகாரமுள்ள வேதத்தை ஒத்துப்போகாத நித்தியமான தண்டனையை

புறக்கணிக்கிறதான, உலகப்பிரகாரமான வாழ்க்கை முறையை ஆதரிக்கிறதாகவும் மேலும் பல தீமைகளையும் கொண்டுள்ளதாகவும் இருப்பதே இந்த புதிய சுவிசேஷத்தின் முறையாகும். மேலும் இது கத்தோலிக்க இரட்சிப்பின் போதனையையும் ஏற்றுக்கொள்ளுகிறது. தத்திரமான, இந்த புதிய சுவிசேஷ முறையானது லிபரலிச இறையியல் கொள்கையைவிட, வேதத்தை நேசிக்கிறதாகவும், மறுபிறப்பை ஆதரிப்பதைப் போல ஒருபக்கம் உரிமை கொண்டாடினாலும், மறுபக்கம் அது தேவனுடைய வார்த்தையை உபயோகப்படுத்துகிற விதங்களில் அருவருக்கத்தக்கதாக இருக்கிறது.

இந்த காணோட்டமானது புதுமையான, உலகப்பிரகாரமான ஆராதனை மற்றும் தவறிழைக்கும் பெந்தகொஸ்தே இயக்கத்தோடு கைகோர்த்துச் செயல்படுகிறது. மேலும் பழமை வாய்ந்த சுவிசேஷத்தைப் பட்சிக்கிறதாக இருக்கிறது. ஆம், விசுவாசத்தைக் குழைத்துப் போடுவதற்கேதுவான தவறுகளை கண்டு உணர்ந்து கொள்ளுவதற்கும் அத்தவறுகளினால் பாதிக்கப்படாதபடி இருப்பதற்கும் இன்றைக்கு சபைகள் முக்கியத்துவம் கொடுப்பதில்லை. இவ்விதமானவற்றோடு தலையிட்டுக் கொள்கிறவர்கள் எவர்களோ, அவர்கள் எந்தவித மாற்றமுமில்லாமல் அதற்கு இணங்கிப் போகிறவர்களாக உள்ளனர். அதற்கு இணங்கிக்கொடுக்காதவர்கள் எவர்களோ, அவர்கள் வெற்றிக்கொள்ளுகிறவர்களாக இருக்கின்றனர்.

தோற்கடிக்கமுடியாது என்று இருந்த இஸ்ரவேலர்களை தோற்கடிக்க, அவர்களோடு கலப்புத் திருமணம் செய்து கொள்ள மோவாபியருக்கு பிலேயாம் ஆலோசனைக் கொடுத்த அந்த நாளிலிருந்தே சாத்தான், உண்மையான சுவிசேஷத்தை அழிப்பதற்காக, செயல்படுவதே அவன் வகுக்கும் முக்கியத்திட்டம். அது இரகசியமாக உள்ளே

ஊடுருவதும், சமரசம் பண்ணுவதுமே ஆகும். இருந்தும், அநேக விசுவாசிகள், தவறுகளிலிருந்து விடுதலைபெற்று தைரியமாக நிற்பதற்கு, வேதாகம கட்டளைக்கு கீழ்ப்படிவதிலிருந்து விலகிவிட்டனர். இவ்விதமாக அழிந்துபோய் கொண்டிருக்கிற அமைப்புகளோடும், இயக்கங்களோடும் போதகர்களும், மூப்பர்களும் தங்களை உட்படுத்திக்கொண்டு, அதுவே பாதுகாப்பானதும், ஏற்றுக்கொள்ளக்கூடியதும் என்று இருப்பார்களென்றால், அவர்களுடைய சபையின் அழிவுக்கு அவர்களே காரணமாவார்கள். உலகப்போக்கில் இருந்தும், எல்லாவிதமான தவறான கோட்பாடுகளிலிருந்தும் தொடர்பற்றவர்களாக இருக்கவேண்டும்.

1960 ஆம் ஆண்டுகளிலும் மற்றும் 1970 ஆம் ஆண்டுகளிலும், பிரிட்டனில் பல்வேறு பிரிவினர்களின் இடையே, இரட்சிக்கப்படாமல் வேதத்தை இழிவுபடுத்தும் மற்றும் சுவிசேஷத்திற்கு எதிரான மக்களின் ஆதிக்கம் அதிகமாக காணப்பட்டது. இன்றைக்கு அவ்விதமான காரியம் ஏறக்குறைய அமைதியாகிவிட்டது. இருந்தபோதிலும் 2 கொரி 6:14-18 என்கிற வசனங்கள் வேதத்தில் தேவனுடைய கட்டளையாகவே இருக்கிறது. ஆம், பவுலுடைய வார்த்தைகள் நம்முடைய கொள்கையாக இருக்கவேண்டும்.

“அந்நிய நுகத்திலே அவிசுவாசிகளுடன் பிணைக்கப்படாதிருப்பீர்களாக; நீதிக்கும் அநீதிக்கும் சம்பந்தமேது? ஒளிக்கும் இருளுக்கும் ஐக்கியமேது? கிறிஸ்துவுக்கும் பேலியாளுக்கும் இசைவேது? அவிசுவாசியுடனே விசுவாசிக்குப் பங்கேது? தேவனுடைய ஆலயத்திற்கும் விக்கிரகங்களுக்கும் சம்பந்தமேது? நான் அவர்களுக்குள்ளே வாசம்பண்ணி, அவர்களுக்குள்ளே உலாவி, அவர்கள் தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனங்களாயிருப்பார்கள் என்று, தேவன் சொன்னபடி, நீங்கள் ஜீவனுள்ள தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களே.

*ஆனபடியால், நீங்கள் அவர்கள் நடுவிலிருந்து புறப்பட்டுப் பிரிந்துபோய், அசுத்தமானதைத் தொடாதிருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். அப்பொழுது, நான் உங்களை ஏற்றுக்கொண்டு, உங்களுக்குப் பிதாவாயிருப்பேன், நீங்கள் எனக்குக் குமாரரும் குமாரத்திகளுமாயிருப்பீர்களென்று சர்வவல்லமையுள்ள கர்த்தர் சொல்லுகிறார்"(2 கொரி* ***6:14-18).***

உதாரணமாக, தூய்மையான சுவிசேஷம் மாத்திரமே இரட்சிப்புக்குண்டான பிரத்தியேகமானது அல்ல என்றும், ரோம கத்தோலிக்க சுவிசேஷ இரட்சிப்பும் சரியானதே என்றும் போதிப்பார்கள் என்றால், அவர்கள் சத்தியத்தை புறக்கணித்தவர்களாக மட்டுமல்லாமல் அப்படியான போதனைகளுக்கெதிராக நாம் எச்சரிப்பதற்கும், அப்படிப்பட்டவர்களிடமிருந்து விலகுவதற்கும் தேவனால் நாம் கட்டளையிடப்பட்டிருக்கிறோம். இதன் அர்த்தம் அவர்களுடைய புத்தகங்களையும் நாம் புறக்கணிக்க வேண்டும். அப்படியல்லவென்றால் நாம் வேதம் சொல்லும் வண்ணமாக, தவறு இழைக்கிறவர்களின் பாவத்திற்கு பங்காளிகளாக இருப்போம். நாம் போதகர்கள், மூப்பர்கள், டீக்கன்களாக சந்தேகமில்லாமல், தேவமக்களின் நலத்தையும், ஆவிக்குரிய பாதுகாப்பையும் குலைத்துப் போடுகிறவர்களாக இருப்போம்.

நமக்கு ஞானஸ்நானம் மற்றும் சபை அமைப்பில் வேறுபாடுகள் இருப்பதினால், மற்ற விசுவாசிகளோடு ஐக்கியம் வைத்திருக்க முடியாது என்று அர்த்தம் இல்லை. நம்முடைய சொந்த சபைகளில் ஒரு தனித்தன்மை வைத்திருந்தாலும் இவ்விதமான வித்தியாசங்களினால், நாம் பாதிக்கப்பட வேண்டிய அவசியமில்லை. புதிய சுவிசேஷமானது, முக்கியமானவைகளை அழிக்கிறதாகவும் விசுவாசத்தின் அத்தியாவசியமான அஸ்திபாரத்தை

தகர்த்துப் போடுகிறதாகவும் இருக்கிறது. இப்படிப்பட்ட சபைகளில் அகப்பட்டிருக்கிற கிறிஸ்தவர்களோடு நாம் தனிப்பட்ட விதத்தில் ஐக்கியம் கொள்ளமுடியாது என்று அர்த்தமில்லை. நம்முடைய கருத்துவேறுபாடு, தவறானவற்றை வேண்டுமென்றே வளர்ப்பிக்கிறவர்களோடும், அப்படியானவற்றோடு ஐக்கியம் கொள்ளுகிறவர்களோடும் சபையின் அடிப்படையில் நாம் ஐக்கியம் கொள்ளமுடியாது. அப்படியான மக்களை நாம் ஆதாயப்படுத்தவே விரும்புகிறோம். வேதரீதியான பிரிவு என்பது எப்பொழுதும் கவனமுள்ள மற்றும் கருத்துள்ள செயலாகக் காணப்படுகிறது.

நம்முடைய முக்கியமான கோட்பாட்டை மட்டுப்படுத்துவதற்கு ஏதுவாக காணப்படுகிற கள்ள உபதேசத்திலிருந்து நம்முடைய சபைகள் வேதாகம ரீதியாக பிரிக்கப்பட வேண்டியதின் முக்கியத்துவத்தைக் குறித்துப் போதிக்கப்பட வேண்டியது நமது தலையாயக் கடமையாக இருக்கவேண்டும். அதுமாத்திரமல்ல, ஒவ்வொரு விசுவாசியும் அடிப்படை சத்தியத்தை எடுத்துக்கூறும் வேதாகம வாக்கியத்தை அறிந்திருக்க வேண்டும். இதுவே இம்முக்கிய பணியை மேம்படுத்தவும், தேவனுக்கு உண்மையாயிருக்கவும் செய்கிறது. இந்நாட்கள் அதிர்ச்சி மிக்க நாட்களாக இருக்கிறது. ஆம், கிறிஸ்துவின் உடன் வேலையாட்கள் என்று சொல்லிக்கொள்ளுகிற ஊழியர்களிடத்திலே ஆவிக்குரிய நம்பிக்கை துரோகம் காணப்படுகிற நாட்களாக இருக்கிறது. ஆனால், அவர் வகுத்த வழியில் அவருடைய மக்கள் பாதுக்காக்கப்படவில்லை என்றால், ஆண்டவருக்காக கொண்ட அன்பு எங்கே? அவருடைய சபைகள், அவருடைய எதிராளிகளின் கைகளில் அனுமதிக்கப்படும் என்றால், கிறிஸ்துவுக்காக கொண்ட அன்பு எங்கே? அவர்களுடைய ஊழியர்கள் "துன்மார்க்கருக்குத் துணைநின்று, கர்த்தரைப் பகைக்கிறவர்களை நீர் சிநேகிக்கலாமா?" (2 நாளா 19:2).

நம்முடைய நோக்கம் பொய் உபதேசத்தார்களிடமிருந்தும், அவர்களின் அபாயகரமான சிந்தைகளிலிருந்தும் தேவனுடைய மக்களைப் பாதுகாக்கவும், பலப்படுத்துவதாகவும் இருக்கவேண்டும். பிரிவைக் குறித்தான போதனைகளை நாம் போதிக்க தவறுவோமென்றால், தேவனுடைய ஆடுகள் முடிவாக கொல்லப்பட ஆயத்தப்படுத்துவதற்கே இடங்கொடுப்பவர்களாக இருப்போம். வேதாகமத்தில் நம்மைக்குறித்து “பரிசுத்தவான்கள்” என்று சொல்லப்படுகிறது. அதாவது, பரிசுத்தமாக்கப்பட்ட அல்லது தேவனுக்காக பிரித்தெடுக்கப்பட்டவர்கள் என்று அர்த்தம். ஆம்! நாம் பாவத்திலிருந்தும், உலகப்போக்கிலிருந்தும், சத்திய விரோதிகளிடத்திலிருந்தும் பிரிக்கப்படவில்லை என்றால் தேவனுக்காக பிரித்தெடுக்கப்பட்டவர்களாக இருக்கமுடியாது.

சில போதகர்கள் கடந்த காலத்தில் தங்களுடைய தனிப்பட்ட விதத்தில் வேதாகம ரீதியான பிரிவை செயல்முறைபடுத்தினார்கள். தங்களுடைய பிரசங்க பீடத்தை அந்நியர் பிரயோகிக்காதபடி பாதுகாத்துக் கொண்டார்கள். ஆனால் அவர்களுடைய சபைகள் இடம் கொடுக்கவில்லை. சபை மக்கள் எந்த ஒரு எச்சரிப்பையும் பெறாததால், அதைப்பற்றி ஒரு தெளிவான அறிவை அவர்கள் பெற்றுக்கொள்ள இயலவில்லை. அதினால் வருத்தகரமாக அவர்களுடைய உண்மையுள்ள போதகன் அவர்களை விட்டு கடந்து போகும்போது, அவர்கள் அவர்களுடைய ஆவிக்குரிய எதிராளிக்கு இணங்கிக் கொடுத்துவிடுகின்றனர்.

இன்றைக்கு கிறிஸ்தவர்கள் மத்தியில் விரிசல்களை, பிரிவினைகளை அல்ல, பிணைப்புக்களையே உண்டுபண்ண வேண்டும் என்று அநேகர் வழக்கத்திற்கு அதிகமாக குரல்

எழுப்பிக்கொண்டு இருக்கின்றனர். ஆனால் பரிசுத்தமுள்ள அந்த வேத எழுத்துக்களை நாம் ஆராயும்போது இந்தக் காரியம் அறிவின்மையாய் காணப்படுகிறது.

1870 ல் பிரிட்டனில் பாப்டிஸ்ட் சங்கத்தில் Down-grade Controversy என்ற காரியம் எழுந்தது. யூனியன் வேதாகமக் கல்லூரியின் பேராசிரியர்கள் மற்றும் பல பிரபலமான ஊழியர்கள், முக்கிய வேதாகம கோட்பாடுகளை மறுதலித்தவர்களாகவும், அவற்றிற்கு கண்டனக்குரல் எழுப்ப தவறினவர்களாகவும் காணப்பட்டனர். ஆனால், சி.எச்.ஸ்பர்ஜன் அதை எதிர்த்து, அதின் அவசியத்தை வற்புறுத்தினார். ஆனால், அவருடைய வார்த்தைக்கு யாரும் செவிசாய்க்கவில்லை. தன்னுடைய மனசாட்சி வேதாகமத்திற்கு கீழ்படிந்தபடியால், அவசியமான சத்தியங்களை மறுதலித்த அந்தச் சங்கத்திலிருந்து வெளியேவந்தார். அது மாத்திரமல்ல, உண்மையாய் இருந்த ஊழியர்களையும் அச்சங்கத்திலிருந்து வெளியே வரும்படிக் கூறினார். அதில் பலர் வெளியே வந்தனர். ஆனால் அநேகர் சத்தியத்திற்காக நிற்கவில்லை. முடிவாக, அந்த சங்கம் லிபரிலிசம் என்ற கொள்கையினாலே, ஒருகாலத்தில் ஊக்கமுள்ள சபைகளின் பெரிய கூட்டமைப்பாக இருந்த அது, பெயரளவில் மாத்திரம் இருந்து அழிக்கப்பட்டுப்போனது. இன்று சுவிசேஷத்திற்காகவும், தேவனுடைய வார்த்தைக்காகவும் உறுதியாக நிற்கிற சபை யூனியன் என்று பார்ப்போம் என்றால், அவைகள் மிகக்குறைவாகவே இருக்கின்றன. ஆம், வேதத்தின் மேல் உண்மையான அன்பு, மற்றும் இந்தக் காரியத்தின் மேல் உண்மையான அன்பு என்பவைகள் மூலமாக மாத்திரமே நாம் இதை நிறைவேற்ற முடியும். முற்காலங்களில் பக்தியுள்ள ஊழியர்கள் ஏற்படுத்தின பிரிவுகள் மட்டுமே சில சபைகளை உண்மையாய் காக்கிறதாக இருக்கிறது.

ஒரு ஞானமுள்ள, புத்தியுள்ள வேதாகம ரீதியான பிரிவினையின் செயலாக்கமானது நீண்ட காலங்கள் செயல்படுத்த வேண்டியவைகளாக காணப்படுகின்றன. ஆதலால், உங்களுக்கு இதை எழுதுபவர் எழுதின இரண்டு புத்தகங்களை இதற்காக படிக்க கூறினால் நீங்கள் பொருட்படுத்த மாட்டீர்கள் என்று நம்புகிறேன். அவை சத்தியத்திற்காக நில் *(Stand for the Truth)* மற்றும் நாம் அடிப்படைவாதிகளா? *(Are we fundamentalists?)* என்பதேயாகும்.

அப்போஸ்தலன் பவுலுக்கு மாத்திரமல்ல, நம்முடைய கொள்கைக்கும் கீழ்க்காணும் காரியங்கள் மிக அவசியமானது. அவைகள் ஜாக்கிரதையுள்ள, முன்னோசனையுள்ள, ஜெபமுள்ள, உண்மையுள்ள வேத ரீதியான பிரிவை செயல்படுத்துவது அவசியமாகும். அது இல்லாதபடிக்கு ஒரு சபையில், நல்ல தரம் வாய்ந்த பக்தியோ, நிலையுள்ள தன்மையோ காணப்படமுடியாது. சிலர் கூறும் வண்ணமாக, பிரிவினையானது எதிர்மறையான ஒன்றாக அல்ல. அது சுத்திகரிக்கப்பட்டு, வேதாகமத்திற்கு கீழ்ப்படிந்து, சபையை பரிசுத்தத்தில் காப்பதினால் அது நேர்மறை ஒன்றாக இருக்கிறது. நாம் பரிசுத்தவான்கள் என்ற எண்ணத்தை மறந்துவிடாமல், அவருக்கும், அவருடைய வார்த்தைக்கும் கீழ்படிந்தவர்களாக காணப்பட வேண்டும் என்று நினைவில் கொள்ளவேண்டும்.

# 8. தியாகமுள்ள சபை

சபையில் உருவாக்கப்பட வேண்டிய உன்னதமான குணங்களில் ஒன்று தியாகமுள்ள சிந்தை (*Sacrificial Spirit*). இதற்காக நாம் அதிகமாக வாஞ்சிக்க வேண்டும். தியாகமுள்ள மக்கள் ரோமர் 12:1 ல் உள்ள கொள்கைகளை நிறைவேற்றுவார்கள். "அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்; இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை" (ரோமர் 12:1). பணஉதவி செய்கிறதாகவோ அல்லது நேரத்தையும், சக்தியும் கொடுக்கிறதாகவோ இருக்கலாம். அவர்கள் எவ்வளவு அதிகமாக கடமைப்பட்டிருக்கிறோம் என்ற உண்மையான உணர்வு கொண்டிருக்கிறார்களோ அவ்வளவாக தேவனுடைய பணிக்கு முழுமையாக, தாராளமாக இணங்கி வருகிறவர்களாக இருப்பார்கள். இந்த உணர்வு கிறிஸ்துவை உயர்த்திக் காட்டுகிற ஊழியத்தினாலே உந்தப்படுகிறது.

இன்றைக்கு இந்த தியாகமுள்ள சிந்தையின் பெரிய எதிரி, சொகுசு வாழ்க்கை முறையே ஆகும். சிறந்த விசுவாசிகளிடத்திலேயும், இன்றைக்கு பொருளாசையும், பேராசையுடன் பொருள் சேர்க்கும் பழக்கமும் தொற்றிக்கொள்ளுகிறதாக இருக்கிறது. தங்கள் முடியாமை மத்தியிலும் சந்தோஷமாக தசமபாகம் கொடுப்பதிலும், மிஷனரிகளுக்கு உதவி செய்வதிலும் காணப்பட்ட நாட்கள் போய்விட்டது. இருந்தும் கிறிஸ்துவின் அன்புக்கு முழு இருதயத்தோடு ஒப்புக்கொடுக்கிற அவ்விதமான சபையாரை மறுபடியுமாக மெதுவாக கொண்டுவருவதற்கு சாத்தியமாகும்.

சுயநலமும், சுயலாபமும், சுயத்தை பூர்த்தி செய்யும் நோக்கத்தை உடைய சபையாக இல்லாமல் இருந்தாலொழிய, தேவனுடைய ஆசீர்வாதத்தினால் தியாகமுள்ள சிந்தையை மறுபடியுமாக புதுப்பிப்பது கூடாதகாரியம். பின்வரும் சில முக்கியமான அம்சங்களை எப்பொழுதும் நம் மனதில் கொண்டவர்களாக இருக்கவேண்டும்.

**1. முழுமையான ஒப்புக்கொடுத்தல் பிரசங்கியின் கருப்பொருளாக இருக்கவேண்டும்:**

உக்கிராணத்துவம் மற்றும் சபைக்கு வேண்டிய மற்ற பல நம்முடைய கடமைகள் ஆண்டவருக்கு முக்கியமாக காணப்பட்டாலும் அதைவிட முக்கியமானது, தானாகவே செயல்படும் மனப்பூர்வமான மனது. அதாவது அதின் பின்னால் இருக்கும் தியாகமுள்ள சிந்தை. இந்த நோக்கத்திற்கு "மனப்பூர்வம்" என்பது முக்கிய வார்த்தையாக அமைகிறது. ஆகவே பிரசங்க ஊழியமானது மிகுந்த உணர்வோடு, கட்டளையிட்டுக் கொண்டும், அதிகாரமிட்டுக் கொண்டும் அல்ல, ஒரு நேரத்தில் அவர்களாகவே ஆண்டவருக்கு முழு இருதயத்தோடு ஒப்புக்கொடுக்கும் வண்ணமாக, தூண்டச் செய்பவைகளாகவும், இணங்க செய்பவைகளாகவும் இருக்க வேண்டும்.

**2. ஆரம்ப போதனை சிறந்தது:**

உக்கிராணத்துவப் பணியைக் குறித்து விசுவாசிகளுக்கு கற்றுக் கொடுக்க வேண்டிய சரியான நேரமானது எதுவென்றால், அவர்களுடைய கிறிஸ்துவ வாழ்க்கையின் ஆரம்ப பகுதியே ஆகும். இப்புத்தகத்தின் ஆசிரியர் மற்ற புத்தகங்களோடு, "தசமபாகம் - கிறிஸ்துவ உக்கிராணத்துவத்தின் சிறப்புரிமை" என்ற புத்தகத்தை சபை அங்கத்துவத்திற்காக வேண்டி வருகிறவர்களுக்கும், வாலிப கிறிஸ்தவர்களுக்கும் கொடுப்பதுண்டு.

**3. சேவை செய்தல் உக்கிராணத்துவத்திற்கு வழிநடத்துகிறது:**

நாம் ஆண்டவருக்காக நடைமுறை ரீதியாக சேவை செய்வதில் விசுவாசிகளை மனப்பூர்வமும், தியாகமுள்ள சிந்தை கொண்டவர்களாக உருவாக்குவோமென்றால், பின்பு உக்கிராணத்துவத்திற்கு தேவையானவைகள் நிச்சயமாக அதைப் பின்பற்றி வருகிறதாக இருக்கும். சில சபைகளில் விசேஷமாக, உற்சாகமான சுவிசேஷத் தன்மையான ஞாயிறு பள்ளியை அவர்கள் பெற்றிருக்கவில்லை என்றால், சேவிக்கும் பணியில் சிறிது வாய்ப்பையே சபை உறுப்பினர்களுக்கு கொடுக்கின்றன. இது தேவனை அவர்கள் சரியாய் சேவிப்பதை தடைசெய்வது மாத்திரமல்ல, அவர்களுடைய வாழ்க்கைக்கும் பிரயோஜனமற்றதாக காணப்படுகிறது. ஆகவே நடைமுறையான சேவையின் மூலமும், தியாக மனப்பான்மையின் மூலமும் பெருகிற உண்மையான உக்கிராணத்துவத்தை வளராமல் தடுக்கிறது.

**4. செல்வ செழிப்பைக் குறித்ததான பெருத்த மாற்றத்தைக் காண்பித்தல்:**

நாம் ஏற்கனவே இன்றைய காலத்தில் காணப்படுகின்ற செல்வசெழிப்பு மற்றும் சுகபோகமான வாழ்க்கை முறையைப் பற்றி குறிப்பிட்டுள்ளோம். இது முக்கியமாக இளம் கிறிஸ்தவர்கள் மீதான விசேஷித்த அக்கறையையும், புரிந்து கொள்ளுதலையும் கொள்வதற்கு நம்மை வழிநடத்துகிறது. செல்வ செழிப்பின் காலம் திடீர்ரென்று வந்தால், அதில் வளர்ந்தவர்கள் எந்த ஒரு புதுமையையும், உண்மையற்ற தன்மையையும் புரிந்து கொள்ளக் கூடாதவர்களாக காணப்படுகிறார்கள். முந்தைய நாட்களில் சுகபோகமானது இன்றைய அடிப்படை தேவையாக இருக்கிறது. சற்று முன்னதாக குறிப்பிட்ட புஸ்தகத்தில் நான் எழுதின பின்வரும் பத்தியைக் குறிப்பிடுகிறேன்.

“இன்றைக்கு நாம் நிறைய வசதி வாய்ப்புகளை கொண்டிருக்கிறோம். புதிதாக சம்பாதிக்கும் வாலிபர்கள்

கூட சகல வசதிகளையும் கொண்ட வாகனங்களை வைத்திருக்கிறார்கள். இவர்களைப் பார்ப்பவர்கள் முப்பது ஆண்டுகளுக்கு முன்பாக நினைத்துக் கூட பார்க்க முடியாமல் இவைகள் இருந்ததன. தங்களுடைய பெற்றோர்கள், பாதி வயதில் அனுபவித்தவைகள், புதிதாக திருமணமானவர்கள், தங்கள் ஆரம்ப நாட்களிலேயே சகல வசதிகளோடு குடும்பத்தை ஆரம்பிக்கின்றனர். ஒரு தாழ்மையாகக் காணப்படுகிற வீடுகள் கூட, நவீனமயமான சகல வசதிகளையும் கொண்ட வீடுகளாக காணப்படுகிறது. இருந்தும் நாம் கேள்விப்படுகிறபடி, சபைகளும், போதகர்களும் பொருளாதார ரீதியிலே கஷ்டப்படுகிறவர்களாகவும், சில முக்கியமான ஊழியங்கள் மாத்திரமே செய்யப்படக் கூடியவைகளாகவும் காணப்படுகின்றன."

இதை நாம் இளம் விசுவாசிகளுக்கு புரிந்துகொள்ளும்படியாக பிரசங்கிக்க வேண்டும். அப்பொழுது அவர்கள் சாதாரண வாழ்வின் அவசியத்தையும், உக்கிராணத்துவத்தின் அவசியத்தையும் புரிந்துகொள்ள ஏதுவாக இருக்கும்.

**5. முன்மாதிரியாக இருப்பதின் தாக்கம்:**

முன்மாதிரியாக இருப்பது, தியாகமுள்ள சிந்தையை எழுப்பி, பிரகாசிக்கிற நெருப்பைப் போலவோ அல்லது அதை அணைக்கவோ ஏதுவான ஒன்றாக இருக்கிறது. நாம் எதைக் கொடுக்கிறமோ அதை மக்கள் பார்க்க முடியாது. ஆனால், நாம் எதை வைத்திருக்கிறோமோ நிச்சயமாக அதை பார்க்க முடியும். மேலும் நாம் ஆண்டவருக்காக எதைச் செய்கிறோமோ அதையும் அவர்கள் நிச்சயமாக பார்க்க முடியும். உள்ளூர் சபையின் தலைவர்கள் ஆடம்பரமான வாகனங்களில் போவார்களென்றால், அவர்களுடைய உதாரணங்கள் மற்றும் வழிமுறைகளை ஏற்றுக் கொண்டவர்கள் அதேவிதமான, உலகப்பிரகாரமான ஆசைகளை பின்பற்றி செல்வார்கள்.

ஆசிரியருக்கு ஒரு சபை குறித்து தெரியும். அந்த சபையின் முன்பாக உள்ள வாகனங்கள் நிறுத்தும் இடத்தில், அந்த சபையின் மூப்பர்களின் ஆடம்பரமான, அதிநவீன, உயர்தரமான வாகனங்கள் நிறுத்தப்பட்டிருக்கும். இது அங்கு வைக்கப்பட்டிருந்த அறிவிப்பு பலகையில் உள்ள வசனத்தைக் காட்டிலும் பிரகாசமாக காணப்படும். இது சபையின் அங்கத்தினர்களுக்கு முக்கியமாக, புதிய விசுவாசிகளுக்கு என்ன சொல்லுகிறது? விசுவாசி கொடையாளியாக இருப்பதற்கு, நியாயமான வாழ்க்கை முறையைக் கொண்டிருக்க வேண்டும் என்ற தேவனால் கொடுக்கப்பட்ட இயற்கையான எண்ணத்தை இது உடைக்கிறதாக இல்லையா? ஆம், நிச்சயமாக.

சபையின் நடுத்தர வயதுள்ள உறுப்பினர்கள் மிகவும் விலையுயர்ந்த உல்லாச பயணத்தைக் குறித்து பேசுவார்கள் என்றால், அதை பார்த்துக் கொண்டிருக்கிற இளம் வாலிபர்கள், தங்களுடைய சாதாரண விடுமுறைக்கு உண்டான ஏற்பாடுகளைக் குறித்து சும்மா இருப்பார்களா? பிரசங்கிமார்களுக்கும் நாம் கட்டாயமாக சகோதரத்துவ எச்சரிப்புகளை கொடுக்கவேண்டும். தியாகமுள்ள சிந்தையை உத்வேகப்படுத்துவதைப் பொறுத்தவரையில், நீ என்ன சொல்லுகிறாய் என்பதைவிட, நீ என்ன செய்கிறாய் என்பதே மிக முக்கியமாக இருக்கிறது. “விசுவாசிகளுக்கு மாதிரியாக இரு” என்று அப்போஸ்தலன் கட்டளையிடுகிறார். சில உறுப்பினர்கள் தவறான முன்மாதிரியை வைப்பார்கள் என்றால் என்ன செய்ய வேண்டும்? பொதுவான இடத்தில் அவர்களுடைய தவறை சுட்டிக்காட்டியும், குறைகூறிக்கொண்டும் இல்லாதபடிக்கு, அவர்களை நட்போடு அணுகுவதே சரியான முறையாகும்.

வாழ்க்கைமுறையில் நியாயமாய் நிதானிக்கும் தன்மையானது, அநேக தியாகங்களுக்கு வழிவகுக்கும். சுயநலமற்ற ஆவிக்குரிய தாராள குணத்தை ஒருவர்

நேசிக்கும்போது, அது நியாயமாக நிதானிக்கும் தன்மையை வளப்படுத்தும். ஏனென்றால், தியாகமுள்ள சிந்தனையே பொருளாசையை தடுக்கிறதாகவும், போதும் என்ற மனப்பான்மையை வளர்க்கிறதாகவும் காணப்படுகிறது.

### 6. உன்னதமான குறிக்கோள் தேவை:

தியாகமானது முக்கியமான ஆவிக்குரிய நோக்கங்களின் உற்சாகத்தை பெறவேண்டியதாக இருக்கிறது. நம்முடைய முதலும் முக்கியமான நோக்கமானது, நம்மை கிரயத்திற்கு கொள்ளப்பட்ட தேவனைப் பிரியப்படுத்துவதும், கனப்படுத்துவதுமே ஆகும். ஆனால், தியாக மனப்பான்மை உள்ள கிறிஸ்தவர்கள் அவர்களுடைய தாராள குணமானது, ஆண்டவருக்காக பெரிய காரியங்களை நடப்பிக்கும் என்பதை அறிந்துகொள்ள வேண்டும். பலனில்லாத காரியத்திற்காக தியாகம் செய்வது மிகக் கடினமான காரியம். ஆகவே, நம்முடைய சபைகள் என்ன செய்கின்றன? நம்முடைய சபையிலும், கிளை ஊழியங்களிலும் விசுவாசிகளின் முழு இருதயமுள்ள ஆர்வத்தை பாதுகாப்பதற்கு அநேக ஆவிக்குரிய குறிக்கோள்கள் இருக்கின்றனவா?

பத்தொன்பதாம் நூற்றாண்டின் மிஷினரி இயக்கத்தை ஆரம்பித்த வில்லியம் கேரியின் முத்திரை மொழி “ஜெபி-திட்டமிடு-கொடு” என்றதாக இருந்தது. அவர்களும் முழு இருதயத்தோடு கொடுத்தனர். கேரி தான் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட ஊழியத்திற்கு முதல் உதவி ஒரு போதகர்களின் கூட்டத்திலிருந்து வந்தது. அதைத் தொடர்ந்து அநேக மக்கள் உதவி செய்தனர். ஆசீர்வாதத்திற்காக ஜெபிப்பதோடு மட்டுமல்லாமல், திட்டமிடுதல் மற்றும் விருப்பங்களை பகிர்ந்து கொள்ளுதல், தியாக மனமுடைய உக்கிராணத்துவத்தை உற்சாகப்படுத்தியது. உண்மையான விசுவாசிகள் எப்பொழுதும், தேவனுக்கு மகிமையைக் கொண்டுவரும் எந்த ஒரு பிரயாசத்தையும், செயலையும் கண்டு உற்சாகப்படுத்துகிறார்கள்.

## 7. தாலந்துகள் முக்கியமானதாக கருதப்பட வேண்டும்:

ஒரு சபையானது, சிறிய வேலைகளைக் கூட தானாக செய்யாத படிக்கு, ஒவ்வொரு வேலைக்கும் அதற்குரிய வேலையாட்களை அழைத்துவருகிறதாக காணப்பட்டால், அங்கு தியாகமுள்ள சிந்தையை வளர்க்க முடியாது. ஆனால், அதிகம் செலவழிக்காத, ஞானமாகவும், சிக்கனமாகவும் செலவழிக்கும் சிந்தையும் எங்கு அதிகம் இருக்கிறதோ, அங்கு தேவனுடைய மக்கள், தங்களுடைய பணம் முழுவதும் தேவனுடைய பணிக்கு செல்லவேண்டும் என்ற நோக்கத்தோடு, தங்களால் முடிந்தமட்டும் தாங்களே வேலைகளை செய்து கொள்ளுகிறவர்களாக காணப்படுவார்கள். இதினால், தியாக மனப்பான்மையானது உற்சாகப்படுத்தப்படுகிறது.

உண்மையாகாவே தியாகமுள்ள உக்கிராணத்துவமானது, “உங்கள் பொக்கிஷம் எங்கேயிருக்கிறதோ அங்கே உங்கள் இருதயமும் இருக்கும்”(மத் 6:21). என்பதை ஒத்துக் கொள்ளுகிறதாக இருக்கிறது. நம்முடைய உக்கிராணத்துவமானது, நமக்கு விலையேறப் பெற்றதாக காணப்படுவதை இழக்காத படிக்கு நம்மை அன்பில் கட்டுகிறதாகவும், ஜெபத்தைத் தூண்டுகிறதாகவும், தேவனுடைய பணியில் அக்கறையைக் காண்பிக்கிறதாகவும், ஒரு பொறுப்புள்ள சிந்தையில் எழும்பும் எந்த பிரச்சனையையும் தீர்க்கிறதற்கு நம்மை ஊக்கமளிக்கிறதாகவும் இருக்கிறது. மற்றொரு விதத்தில் சொல்லப்போனால், தியாகமுள்ள சபை ஒரு சமாதானம் நிறைந்த சபையாக இருக்கிறது.

# 9. அன்புகூரும் சபை

ஒன்பதாவது கொள்ளகையாக நேசிக்கும், அக்கறை கொள்ளும் சபையின் மகத்துவத்தை மேன்மைப்படுத்திச் சொல்லுவதே ஆகும். இது மிகவும் அவசியமாக இருக்கிறது. ஏனென்றால், நம்முடைய கொள்கையின் திட்டத்தில் இது மிக உயர்ந்த இடத்தில் பங்கு வகிக்கிறது. அநேகமாக சபை வாழ்விற்கு தேவையான அனைத்து காரணிகளில், இது முக்கிய இடத்தை கொண்டுள்ளது என்று கூட சொல்லலாம்.

ஒரு ஐக்கியம், சமூகம், பாசம், அக்கறையுடன் கூடிய அன்பை பெறுவது என்பது தேவனுடைய புதிய கட்டளையை மதிப்பதாகும். அப்போஸ்தலன் யோவான் இது கட்டளை என்று அறிவிக்கிறார். இருந்தும் இளம் கிறிஸ்தவ சபைக்கு செயலாக்கத்திலும், பிணைப்பற்றாலிலும் புதியது (1 யோவான் 2:7-8). பவுல் எபேசியர் 4 -ம் அதிகாரத்தில் மனத்தாழ்மை, சாந்தம், நீடிய பொறுமை மற்றும் அன்பினால் ஒருவரையொருவர் தாங்குங்கள் என்று சொல்லுகிறார். இதை நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்புக்குப் பாத்திரவான்களாய் நடக்க ஒரே வழி இதுவே என்று சொல்லுகிறார். ஓ! சகோதர அன்பும், அக்கறையும் கொண்ட சூழ்நிலையில் நம்முடைய சபை இருப்பதற்கு நாம் எவ்வளவு அதிகமாக வாஞ்சிக்க வேண்டும். இதை நாம் அடைய முடியும் என்று அறிந்து கொள்வது என்ன அருமையான காரியம்! இவ்விதமான சூழ்நிலையை ஒருமுறை பெற்றுக் கொண்ட பின்பு, அவற்றை கட்டிக் காப்பற்றி பராமரிப்பது எவ்வளவு முக்கியம்?

ஆம், தொண்டாற்றும் சபையானது, நேசிக்கிற சபையாக ஆகிவிடுகிற ஒன்றாக இருக்கிறது. ஏனென்றால் உழைப்பில் உண்டான ஐக்கியமானது ஆழமான பிணைப்பை

உருவாக்குகிறதாக இருக்கிறது. பொதுவான ஒரு உயர்ந்த குறிக்கோளை அவர்கள் பெற்றிருக்கும் போது, பகையுணர்வு குறைகிறதாய் காணப்படும். ஐக்கியத்திற்குரிய நிகழ்ச்சியோ, சபை நிகழ்ச்சியோ, திருவிருந்தோ மற்ற எந்த காரியமாக இருந்தாலும், அதில் சகோதர அன்பை ஏற்படுத்தும் என்று சொல்ல முடியாது. ஏனென்றால் அடிக்கடி சண்டையும் பிரச்சனையும் கொண்ட சபையில் இவ்விதமான நிகழ்ச்சிகள் அநேகம் உண்டு. தொண்டாற்றும் சபையில் உள்ள ஐக்கியமானது விசுவாசிகளுக்கு பிணைப்பை ஏற்படுத்துகிற ஒரு சிறந்த காரணியாக இருக்கிறது.

நம்முடைய சக விசுவாசிகளிடத்தில் நாம் செலுத்தும் அன்பு இரட்சிப்பின் ஒரு முக்கிய ஆதாரங்களில் ஒன்றாக இருக்கிறது. ஆறு முறை கிரேக்க புதிய ஏற்பாட்டில் அன்பு என்ற வார்த்தையானது "பிலதெல்பியா" என்று கூறப்படுகிறது. அதாவது, சகோதர அன்பு என்பது சபைகளுக்குள்ளே இருக்கும் பிரிவினைகளையும், சண்டைகளையும் அகற்றிவிட்டு, பிலதெல்பியா அன்பு வளர்க்கப்பட வேண்டும். ஒருவரை ஒருவர் கனப்படுத்துதல், பரிவு காட்டுதல், அன்பு கூறுதல் போன்ற இவைகள் முக்கியமானவைகள் என்றாலும் போதுமானவைகள் அல்ல. தேவன், அன்பின் ஆழத்தையும், மகத்துவத்தையும் இரத்தப் பாசத்தோடு சம்மந்தப்படுத்தி கூறுகிறார். நாம் "சகோதர அன்பு" வைத்திருக்க வேண்டும். எல்லா நிருபங்களிலும் இதுவே முக்கிய கொள்கையாக இருக்கிறது. **(ரோமர் 12:10; 1தெச 4:9; எபி 13:1; 1பேதுரு 1:22 மற்றும் 2பேதுரு 1:7).**

சகோதர அன்பை ஒரு சபையில் வளர்த்துக் கொள்வதற்கு முக்கிய காரணத்தை நம்முடைய இரட்சகரின் உன்னதமான ஜெபத்தில் பார்க்கலாம். "அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும், பிதாவே, நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கிறதற்காக, நீர் என்னிலேயும் நான்

உம்மிலேயும் இருக்கிறதுபோல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக்கொள்ளுகிறேன்" (யோவான் 17:21). ஒரு சபையாக நாம் தேவனுடைய குணத்தோடு பிதா, குமாரன், பரிசுத்த ஆவி ஆகியோர்கள் இடையில் உள்ள உன்னதமான அன்பையும் வெளிப்படுத்த நோக்கம் கொண்டவர்களாக காணப்படவேண்டும். நம்முடைய குடும்ப சாயல் பரத்திலிருந்து பெற்றவையாக இருக்க வேண்டும். இதுவே, வல்லமையுள்ள சாட்சியைக் கொண்டுவரும். நிச்சயமாக, இந்தக் காரியமானது போதகர்களின் அதிமுக்கியமான அக்கறையாக இருக்க வேண்டும்.

சபையில் அன்பே பிரதானமாக இருப்பதற்கு மற்றுமொரு முக்கிய காரணம் என்னவென்றால், சபையானது தேவனுடைய வாசஸ்தலமாக இருக்கிறது(1கொரி 3:16). அந்த சபையானது, தேவன் வாசம் பண்ணுவதற்கு தகுதியான இடமாக இல்லையென்றால் ஆசீர்வாதத்தைப் பெறமுடியாது. தேவ ஆவியானவர் தங்குவதற்கு அன்பும், பாசமும், அக்கறையும் கொண்ட சூழ்நிலை இருப்பது அவசியம்.

தேவன் ஒவ்வொரு சபையையும் ஒரு குடும்பமாகத் தான் பயிற்றுவிக்கிறாரே ஒழிய, வெறும் தனி நபர்களைக் கொண்ட குழுவை அல்ல என்பதை அறிந்துகொள்ள வேண்டும். ஒரு குடும்பத்தின் மிகப் பெரிதான குணாதிசயம் அன்பே ஆகும். இவ்விதமான கிருபையின் கனியாகிய அன்பில் நாம் வித்தியாசத்தை ஏற்படுத்தி கிறிஸ்து கொண்ட நோக்கத்தையே அவமதிக்க துணிகரம் கொண்டுள்ளோமா?

மேலும் நாம் அறிந்து கொள்ள வேண்டியது என்னவென்றால், பரிசுத்தமாகுதலில் அன்பானது குடும்பத் தலைமையை வகிக்கிறது. அன்பு இல்லாமல் ஆவிக்குரிய குடும்பத்தில் உள்ள மற்ற அங்கத்தினர்களுக்கு பரிசுத்தமாகுதல் பலமற்றதாக போய்விடும். அது மாத்திரமல்ல, வெகு

விரைவில் நாம், சுய ஆசை கொண்டவர்களாக, சுய அக்கறை கொண்டவர்களாக, சுயபரிதாபம் கொண்டவர்களாகக் காணப்படுவோம். மேலும் மற்றவர்கள் மீது பொறாமை கொள்பவர்களாகவும், குறை கூறுபவர்களாகவும், சகோதர சிநேகமற்றவர்களாகவும் இருப்போம். ஆனால், உண்மையான பரிசுத்தமாகுதல் ஆரம்பத்தில் இருந்தே அன்பை காட்டுகிறதாகவும், நம்மைக் குறித்ததான சிந்தையை எடுத்துவிட்டு மற்றவர்கள் மீதான சிந்தனையை நமக்கு கொண்டுவருகிறதாக இருக்கும்.

அன்புக்கு முக்கிய முதலிடம் கொடுப்பதற்கு மற்றுமொரு காரணம் என்னவென்றால், சபையின் அங்கத்தினர்கள் இடையில் உண்மையான அன்பு இல்லாமல், எபேசியர் **4:16**-ல் கூறப்படுகிற செயலாற்றலை உருவாக்க முடியாது. "அவராலே சரீரம் முழுதும், அதற்கு உதவியாயிருக்கிற சகல கணுக்களினாலும் இசைவாய்க் கூட்டி இணைக்கப்பட்டு, ஒவ்வொரு அவயவமும் தன் தன் அளவுக்குத்தக்கதாய்க் கிரியைசெய்கிறபடியே, அது அன்பினாலே தனக்குப் பக்திவிருத்தி உண்டாக்குகிறதற்கேதுவாகச் சரீரவளர்ச்சியை உண்டாக்குகிறது". உண்மையாகவே வலிமையான செயலானது, பிலதெல்பியா அன்பின் மூலமாக வரும் சகோதர பாசத்தை சார்ந்து சபையானது செயல்படுத்துகிறது. இவ்விதமான அன்பு சுலபமாக சாத்தானால், அடிக்கடி அனுப்பப்படுகிற பொறாமையினாலோ, வீண்பேச்சு மற்றும் வேறெந்த விதத்தினாலோ தகர்த்துவிட முடியாது.

அருமையான செடியின் விளைச்சல் மண்ணைச் சார்ந்து இருப்பது போல, சகோதர அன்பின் வளர்ச்சியும் அவ்விதமாக இருப்பது உண்மை. இங்கே நாம் பார்க்கும் தேவையான மண், மறுபடியும் பிறந்த சபையாக இருக்கிறது. ஆம்! ஆவிக்குரிய குளிர்ந்து போன தன்மை, சுய நீதி, பெயரளவு கிறிஸ்தவர்கள் இவ்விதமான சூழ்நிலையில் சபை இருப்பது

மிகவும் வருத்தமாக இருக்கிறது. ஏனென்றால், இவ்விதமான மக்கள், மனந்திரும்பினதற்குண்டான அடையாளத்தை காண்பிக்காமல், புதிய குணத்தைப் பெற்றிராமல், சபையின் அங்கத்தினராக அனுமதிக்கப்படுவதே இவ்வருத்தமான நிலைமைக்கு காரணமாகும். இவ்விதமாக ஒரு சபையில் இருக்கும் பட்சத்தில், உண்மையான ஆவிக்குரிய அன்பானது, உண்மையாக மனமாற்றமடைந்த அங்கத்தினர்கள் மத்தியில் மாத்திரம் காணப்படும்.

நாம் ஆசான்களாக நடைமுறையிலும், உற்சாகத்துடனும் புதிய ஏற்பாட்டு போதகனுக்குரிய போதனையை அப்பியாசப்படுத்தவும், இந்த அன்பை விளக்கப்படுத்தவும் வேண்டும். நாம் தலைவர்களாய் நம்மைப் போல உள்ளவர்களுக்கு மாத்திரமல்ல, எல்லோருக்கும் அன்பின் முன்மாதிரியாய் காணப்படவேண்டும். அங்கத்தினர்களின் மத்தியில், வேண்டிய அன்பை தேவையான நேரத்தில் கொடுக்கவும், அவர்களின் மத்தியில் இருக்கிற சிறுசிறு கருத்து வேறுபாடுகளை களைய வேண்டிய நல்ல வழிகளைக் கண்டறிய வேண்டியவர்களாக நாம் இருக்கிறோம். வியாதியிலும் தேவையின் மத்தியிலும் இருக்கிறவர்களைச் சந்திக்க சபையின் அங்கத்தினர்களை நாம் உற்சாகப்படுத்தவும், ஒருவருக்கொருவர் கண்காணித்துக் கொள்ளும் தேவ மக்களாக காணப்படும்படிக்கு போதிக்கப்பட வேண்டியவர்களாகவும் இருக்கிறோம்.

**சகோதர அன்பை வளர்க்கும் நடைமுறை குறிப்புகள்:**

சபையின் சகோதர அன்பானது, ஜெபத்தோடு தேவனுடைய உதவியைக் கொண்டு கீழ்வரும் நோக்கங்கள், செயலினாலே தொடர்ந்து முன்னேற்றமடைய வேண்டியதாயிருக்கிறது.

1. சகோதர அன்பை வளர்ப்பதே, தேவனுடைய கட்டளைக்குக் கீழ்ப்படிவதின் முக்கிய செயலாக

இருக்கிறது என்று நாம் முற்றிலும் ஏற்றுக்கொண்டவர்களாய் இருக்கவேண்டும்.

*2.* சபை என்ற குடும்பத்தில், தேவனால் நியமிக்கப்பட்ட, தேவனுடைய பிள்ளைகள் என்று நாம் பாவித்து, அந்தச் சபையின் சமாதானத்திற்கு அடுத்தக் காரியத்திலும், அதின் ஆசை, விருப்பங்களை நிறைவேற்ற நாம் கடமைப்பட்டுளோம் என்று எண்ண வேண்டும்.

*3.* தேவ ஆவியானவரால், கிறிஸ்துவானவர் வாசம் பண்ணுவதற்கு ஏற்றதாக, நாம் சபையின் பரிசுத்தமும், அழகான, சகோதர ஐக்கியத்தைக் கொண்ட சபையாக உருவாக்க உழைக்க வேண்டும்.

*4.* கிறிஸ்துவில் ஒரே சரீரமாக, ஒருங்கிணைந்த வழியில், ஆராதிக்கவும், கற்றுக்கொள்ளவும், அவருக்கு பணி செய்யவும், கிறிஸ்துவானவர் எதிர்பார்க்கிறார் என்றும், தன்னிச்சையாக செயல்படுவது, பெருமையாகிய பாவம் என்பதை நாம் அறிய வேண்டும்.

*5.* கிறிஸ்து நம்மை கிருபையாக மன்னித்ததுபோல, நாமும் நம்முடைய ஆவிக்குரிய சகோதர, சகோதரிகளிடையே மன்னிக்கும் குணத்தை கொண்டவர்களாக கடமைப்பட நம்மை நாம் கட்டாயமாக ஒப்பு விக்க வேண்டும்.

*6.* நம்முடைய சக விசுவாசிகளுக்காக, ஆதரவும், அன்பும், சுயநலமற்ற தன்மையும், கூடிப்பழகும் ஆர்வமும், நட்பையும் வளர்த்துக் கொள்வதற்காக, எல்லா தீய வழிகளைக் கொண்ட நம்முடைய சுய அன்பை அடக்குவதே நம்முடைய முக்கிய நோக்கமாக இருக்க வேண்டும்.

*7.* நாம் வாழ்த்துவதிலும், நட்பிலும் மற்றும் உதவுவதிலும், அன்பிலும் மற்றவர்களிடத்தில் நம்முடைய பாசத்தையும், பரிவையும் காட்டுவதற்கு ஒவ்வொரு முயற்சியையும் கட்டாயம் எடுக்க வேண்டும்.

*8.* நாம் நம்முடைய சக விசுவாசிகளுக்காக, அவர்களின் சூழ்நிலை மாற்றத்தை கருத்தில் கொண்டும், ஞானமுள்ளவர்களாக, அவர்களுடைய ஆவிக்குரிய மற்றும் சரீர ஆசீர்வாதத்திற்காகவும் தொடர்ந்து ஜெபத்தில் ஈடுபடவேண்டும்.

*9.* சபை மக்கள் நம்மை சுலபமாக அணுகக்கூடியவர்களாய், ஒரே குடும்பத்து விசுவாசிகளாய் இருப்பதால், அவர்களுக்கு உதவி செய்ய நாம் எப்பொழுதும் தயாராக உள்ளவர்களாக இருக்க நம்மை நிச்சயப்படுத்திக் கொள்ளவேண்டும்.

*10.* நாம் வீண் பேச்சு, அரட்டை, புறங்கூறுதல் ஆகியவற்றை முழுவதுமாக ஒழித்துவிட்டு, தேவன் விசுவாசிகளாகிய நம்மிடையே வைத்திருக்கிற விலைமதிக்க முடியாத உறவை தீட்டுப்படுத்தாதவர்களாக, ஒருவரையொருவர் கனப்படுத்தி, ஒருவர் பெயரை ஒருவர் காப்பாற்றி கொள்ளுகிறவர்காளாக இருக்க வேண்டும்.

*11.* மாதிரிகளாக இருக்கவேண்டிய விஷயத்தில், நம்மை தூய்மையுள்ளவர்களாக காத்துக்கொண்டு, நம்மேல் இருக்கிற பெரிய உத்திரவாதத்தை உணர்ந்தவர்களாக இருக்க வேண்டும். இதினால், சகோதர தன்மையற்ற, உண்மையற்ற, ஒழுக்கமற்ற காரியங்களினால் சபை கறைபடும் என நாம் குற்றம்சாட்டப்படமாட்டோம்.

*12.* எந்தவித காரணமுமின்றி நம்முடைய சக விசுவாசிகளை இழுவுபடுத்துகிற காரியங்களான பொறாமை, பெருமை, கசப்பு, கொடிய சந்தேகங்கள் மற்ற பல அசுத்தங்களை நம்முடைய மனதிலிருந்து அகற்றிவிட வேண்டும்.

*13.* எந்தவித பட்சபாதமின்றி, ஒரு சில மக்களோடு மாத்திரம் நம்முடைய உறவை வைத்துக் கொள்ளாமல், அனைத்து வகையான மக்களுடனும், ஆத்துமாக்களை ஆதாயப்படுத்தும் வண்ணமாக நட்புறவு வைத்துக் கொள்ளவேண்டும்.

*14.* நாம் மாறுத்தரம் ஒன்றுமே செய்யாமல், நாம் சபையின் அங்கத்தினர் காட்டும் அன்பு, பரிவு, உபகாரங்கள், உதவிகள், தயாள குணங்கள் இவைகளை நமக்கு சாதகமாக எடுத்துக் கொண்டு தவறாக பயன்படுத்தக் கூடாது.

*15.* இம்மக்கள் நம்முடைய மக்களாகவும், அவர்களுடைய தேவன் நம்முடைய தேவனாகவும், அவர்களோடு ஐக்கியம் கொள்ளுவதும், பணிவிடை செய்வதும் தலையாய கடமையாகவும், மகிழ்ச்சியாகவும் இருப்பதினால், தேவனுக்கு மகிமையும், ஐக்கியத்தை வளர்ப்பிக்கும் வண்ணமாக, நமது சபை ஒழுங்குபடுத்துகிற கிறிஸ்தவ பணிகளை ஒரு கடமையாக நாம் ஆதரிக்க வேண்டும்.

மேற்சொன்ன குறிப்புகள் இந்நூலின் ஆசிரியர் எழுதின சகோதர அன்பின் நோக்கம் *(The Goal of Brotherly Love)* என்ற நூலில் அடங்கியுள்ளது.

லண்டனில் வாழ்ந்த பதினெட்டாம் நூற்றாண்டு இளம் பாப்டிஸ்ட் போதகர் ஒருவர் எழுதின பின்வரும் பாமாலை வரிகள் பிலதெல்பியா அன்பை நேர்த்தியாக கூறுவதை நாம் பார்க்கலாம்.

*என்ன ஒரு இனிமை, என்ன ஒரு பரலோகத் தன்மை*
*தங்கள் தேவனை அவர்கள் நேசிக்கும் போதும்,*
*ஒருவரை ஒருவர் சமாதானத்தின் மகிழ்ச்சியினாலே,*
*அவருடைய வார்த்தையை நிறைவேற்றும் போதும்!*

*ஒவ்வொருவரும் மற்றவர்களுடைய வலியை உணரும்போதும்,*
*அவ்வலியின் ஒருபகுதியை சுமந்துகொள்ளும்போதும்;*
*ஒருவருக்கொருவர் கவலை பெருகும்போது,*
*ஒருவருக்கொருவர் இதயம் தேற்றப்படுகிறபோதும்;*

பொறாமை, வெறுப்பு, பெருமையிலிருந்து விடுதலையாகி
நம்முடைய விருப்பங்களெல்லாம் மேலானவைகளை காணும் போதும்,
ஒவ்வொருவரும் பிறரின் குறைகளை மறைத்து
அன்பை வெளிப்படுத்துகிற போதும்;

அன்பானது ஒரே மகிழ்ச்சி வெள்ளத்துடன்
ஒவ்வொரு விசுவாசியினூடாய் பாயும்போதும்,
ஐக்கியமும், அன்பும் அவர்களின்
ஒவ்வொரு நடத்தையில் காணும் போதும்.

அன்பானது, தெய்வீகமான பிணைப்பாயும்
பரலோகத்தில் மகிழ்ச்சியுள்ள ஆத்துமாக்களை கட்டுகிறதும்;
பலோகத்தின் சுதந்திரவான்களாய் நாம், அன்பினாலே
நம்முடைய இருதயம் நிரப்பப்பட பார்ப்போமாக.

- ஜோசப் ஸ்வெயன்

# 10. விசுவாசிக்கும் சபை

வேதாகமம் முழுவதும் கிறிஸ்தவனுடைய அனைத்து நடைமுறை வாழ்க்கைக்கு விசுவாசமானது முக்கிய பங்கு வகிக்கிறது என்பதைக் காட்டுகிறது. ஒரு போதகன் சபையின் விசுவாசத்தைக் கட்டிக் காப்பாற்றாமலும், அதைக் குறித்து சிந்திக்காதவனாக இருப்பானென்றால், அவன் போதகனுக்குரிய தகுதியின் முக்கிய அம்சத்தையே தவறவிடுகிறான். நம்முடைய முழு சபையும் அவருடைய உண்மைத்தன்மைக்கும், வாக்குத்தத்தங்களுக்கும், பராமரிப்புக்கும், அவற்றின் பேரில் உறுதியான நம்பிக்கை கொண்டவர்களாக இருப்பதும், எல்லா காரியங்களிலும் அவருக்கு முழுவதுமாக கீழ்ப்படிவதும் நம்முடைய ஏக்கமாக இருக்க வேண்டும்.

சபையின் விசுவாசத்தைக் குறித்து பவுல், தன்னுடைய நிருபங்களில் அடிக்கடி மேன்மைப்படுத்தியும், ஊக்கப்படுத்தியும் சொல்லுகிறார். பவுலினுடைய போதனையில், ஒரு விசுவாசிக்கு தனிப்பட்ட விசுவாசமானது உயிர் நாடியும், சபையின் விசுவாசமானது அதிக, விலையேறப்பெற்ற கிருபைக்குரியதாகவும் இருக்கிறது. பவுல் கொரிந்து சபையில் ஒன்றாக அமைந்த நற்குணங்களை பட்டியிலிடும்போது, "விசுவாசத்திலும், போதிப்பிலும், அறிவிலும், எல்லாவித ஜாக்கிரதையிலும், எங்கள்மேலுள்ள உங்கள் அன்பிலும், மற்றெல்லாக் காரியங்களிலும், நீங்கள் பெருகியிருக்கிறதுபோல, இந்தத் தர்மகாரியத்திலும் பெருகவேண்டும்"(2 கொரி 8:7) என்று எழுதுகிறார். "ஆகிலும் உங்கள் விசுவாசம் விருத்தியாகும்போது" (2 கொரி 10:16). இங்கு அவர்களுடைய ஒருங்கிணைந்த விசுவாசம் மேலும் வளர பவுல் எதிர்பார்க்கிறதை நாம் பார்க்கிறோம்.

பிலிப்பியருக்கு எழுதும் போது, பல்வேறு பாடுகள் மத்தியில் அவர்களுடைய விசுவாசத்தைக் குறித்துப் பவுல் "விசுவாசமாகிய பலி" (பிலி 2:17) என்று குறிப்பிடுகிறார். ஆம், அவர் முழு சபையின் விசுவாசத்தைக் குறித்து மனதில் கொண்டவராய், அதைக்குறித்து அதிக சந்தோஷம் உள்ளவராக காணப்படுகிறார். தெசலோனிக்கேயரைப் பற்றி எழுதும் போது பவுல், "உங்கள் விசுவாசத்தின் கிரியையும் (ஒருங்கிணைந்த சபை விசுவாசம்), உங்கள் அன்பின் பிரயாசத்தையும் நாங்கள் இடைவிடாமல் நினைவு கூர்ந்து" (1தெச 1:3) என்று எழுதுகிறார். 1தெச 3:6–ல் தீமோத்தேயு கொண்டுவந்த அவர்களுடைய விசுவாசத்தையும் (ஒருங்கிணைந்த விசுவாசம்), அன்பையும் குறித்த நற்செய்தியை பவுல் குறிப்பிடுகிறார். 2 தெச 1:3–4ல் சகல துன்பங்களிலும், உபத்திரவங்களிலும், பொறுமையையும், விசுவாசத்தை (சபையாக) யும் காண்பிக்கிறதினிமித்தம் உங்களைக்குறித்து நாங்கள் தேவனுடைய சபைகளில் மேன்மைபாராட்டுகிறவராய், அவர்களுடைய ஒருங்கிணைந்த விசுவாசம் மிகவும் பெருகுகிறபடியால் பவுல் தேவனை ஸ்தோத்தரிப்பதை நாம் பார்க்கலாம். மேலும் பவுல் 2 தெச 1:1 ல் விசுவாசத்தின் கிரியை பலமாக அவர்களிடத்தில் நிறைவேற ஜெபிக்கும்பொழுது, அவர் முழுசபையை குறித்துதான் நிச்சயமாக பேசுகிறார் என்று அறிகிறோம். ஆம், சபையாய் கூட்டமைப்பான, ஒருங்கிணைந்த விசுவாசமானது மகிமைகரமான அப்போஸ்தல நோக்கமும், கொள்கையுமாக இருக்கிறது.

நம் வேதாகமம் நமக்கு அடிக்கடி வலியுறுத்துவது போல, தனி நபருக்கு மாத்திரமல்ல, தேவனிடத்திலும், அவருடைய வார்த்தையிலும் உள்ள உறுதியான நம்பிக்கையே சபையின் ஆசீர்வாதத்திற்கு முன் ஆதாரமாக இருக்கிறது. தேவன் அவர்களை சரி என்று நிரூபித்து, பாதுகாப்பார் என்று அறிந்து சந்தோஷப்படுகிற மக்கள் எந்த மக்கள்?

பிரத்யேகமாக, அவர்கள் தங்கள் நம்பிக்கையை அவரிடத்தில் வைக்கிறவர்கள் மாத்திரமே (சங் 5:2). இருந்தபோதிலும், இக்காலங்களில் பயமுறுத்துகிற உண்மை என்னவெனில், தேவனுடைய மக்களின் நம்பிக்கையானது, தேவனுடைய வார்த்தையின் வழிகளுக்கு மனுஷீகமான கண்டுபிடிப்புகளை துணைபடுத்திச் செல்லும் உண்மையற்ற வேலையாட்களால் இரகசியமாக பாழ்படுத்தப்படுகிறது. சில நேரங்களில் அழிக்கப்பட்டும் வருகிறது.

நவீன முறைகளை ஊக்குவிக்கிறவர்கள் நம்மிடத்தில் அழுத்தமாக சொல்லுவது என்னவென்றால், நாம் இனிமேல் தேவ ஆவியானவர் மீதோ, அவருடைய வார்த்தையின் வல்லமையின் மீதோ நம்பிக்கை வைக்கத் தேவையில்லை. ஏனென்றால், அவர்களுடைய புத்திசாலித்தனமான முறைகளும், அசாதாரணமான சிறப்பு வாய்ந்த மக்களும் தேவையான பலன்கள் தருவார்கள் என்று கூறுகின்றனர்.

விருப்பமில்லாத சந்ததியினரை கவருவதற்கு, உலகத்திற்கும் சபைக்கும் நடுவே உள்ள இடைவெளியை மூடுவதின் நோக்கத்தோடு, நாம் பொழுதுபோக்கு முறைகளை நம்புவதற்கு அழைக்கப்படுகிறோம். நாம் நடனத்தையும், நாடகத்தையும், இயேசு படத்தையும் நம்புவதற்கு வற்புறுத்துகிறோம். கல் இருதயமுள்ளவர்களை உற்சாகமூட்டுவதற்கு, ஆச்சரியமூட்டும் வரங்களான குணமாக்கும் மற்றும் தீர்க்க தரிசன வரங்களை நாம் நம்புவதற்கு போதிக்கப்படுகிறோம். நாம் ஒரு பெருங்கூட்டத்தை பெறுவதற்கு, அனைத்து சபைகளின் ஒத்துழைப்பை நம்ப வேண்டுமென்று பிரபல சுவிசேஷகர்கள் வற்புறுத்துகிறார்கள்.

உண்மையாக சொல்லப்போனால், விசுவாசமானது சபையின் மத்தியில் மரித்துக்கொண்டிருக்கிறது. அநேக

போதகர்கள் சொல்கிறது என்னவென்றால், ஒருகாலத்தில் உண்மையாக காணப்பட்ட கிறிஸ்தவர்கள் கூட ஜெபங்களுக்கு வந்து ஐக்கியப்பட வைக்க முடியவில்லையாம். காரணம், அவர்கள் ஜெபத்தின் வல்லமையையும், தேவன் அவர்களுடைய ஜெபத்திற்கு வல்லமையாய் பதிலளிப்பார் என்றும் நம்பாததினால் தான். அதுமாத்திரமல்ல, போதகர்கள் ஞாயிறு பள்ளிகளுக்கு குழந்தைகளை கூட்டி சேர்ப்பதற்கும், ஆத்துமாக்களைச் சந்திப்பதற்கும் விசுவாச குழுக்களை ஏற்படுத்துவது அதிக சிரமமாக இருக்கிறது என்று அறிக்கையிடுகிறார்கள். தேவனுக்கடுத்த காரியங்களில் ஈடுபடுவதற்கு, ஏன் விருப்பமற்றவர்களாய் இருக்கிறார்கள். இது ஏனென்றால், அம்மக்கள் இவ்விதமான உழைப்பின் மீது உள்ள நம்பிக்கையை இழந்துபோனதினாலும், அந்த உழைப்பிற்காக தேவன் அவர்களுக்கென்று வைத்திருக்கும் ஆசீர்வாதங்களைக் குறித்து சற்றேனும் உணர்வற்றவர்களாக இருப்பதினாலும் தான்.

இருந்தும், விசுவாசத்தை விட வேறு எது தேவனைப் பிரியப்படுத்துகிறதாக இருக்கிறது? சபை குழுக்களினாலோ, பெரிய போதகர்களாலோ, நம்முடைய திறமைகளினாலோ, நம்முடைய பணத்தினாலோ அல்ல, அவரிடத்தில் வைக்கிற விசுவாசத்தில் மாத்திரமே இருக்கிறது. நாம் விசுவாசத்தினால் இரட்சிக்கப்பட்டு, விசுவாசத்தினாலே நம்முடைய கிறிஸ்தவ வாழ்க்கை முழுவதும் ஆசீர்வதிக்கப்பட்டதாக இருக்கிறது. நாம், விசுவாசத்தினால் நடக்க அழைக்கப்பட்டிருக்கிறோம். நம்முடைய விசுவாசத்தின் பயிற்சியாக, மேற்கொள்ள உலகப்பிரகாரமான நவீன முறைகளை தேவன் ஒருக்காலும் அனுமதிக்கவில்லை. அவ்விதமான பயிற்சி அடிக்கடி தோல்வியாகவே அமைகிறது. நாம் எப்படி விசுவாச வளர்ச்சிக்குண்டான காரியங்களில் செயல்படுகிறவர்களாக இருக்கிறோம்?

## 1. உணர்வுள்ள நோக்கம்:

தேவனுடைய வல்லமையை மகிமைப்படுத்தவும், அதை உபயோகப்படுத்தவும், வேத ரீதியான முறைகளில் ஆழமான நம்பிக்கை கொள்வதினாலும், சபை அங்கத்தினர்களின் ஒற்றுமைக்காக, நாம் அதிகமாக ஜெபிக்கவும், வாஞ்சிக்கவும் வேண்டும். இதை உற்சாகப்படுத்துவதற்கு நம்முடைய பிரசங்கங்கள், விசுவாசத்தைக் குறித்தும், உண்மைத்தன்மையைக் குறித்தும் கட்டாயம் மேலோங்கி காணப்பட வேண்டும். ஆம், உண்மையுள்ள மக்களை, தேவன் ஆசீர்வதிப்பதைக் குறித்து பழைய, புதிய ஏற்பாட்டில் கூறப்பட்டுள்ளதை நாம் பார்க்கலாம். மேலும், நம் வேதாகமம் வாக்குத்தத்தங்கள் நிறைந்ததாக இருக்கிறது. இவைகள் வெறும் தனிப்பட்ட நபருக்காக மாத்திரமல்ல, சபைக்காகவும், சுவிசேஷப் பணிக்காகவும் இவைகளை நாம் முக்கியப்படுத்த வேண்டும். நிச்சயமாக, அவர் தம் வாக்குத்தத்தங்களைக் காத்திட, நம் இரட்சகருடைய வல்லமையையும், அன்பையும், நேர்மைத் தன்மையையும் குறித்து அதிகமாக வற்புறுத்திச் சொல்ல வேண்டும். நாம் அடிக்கடி நான் சபையின் விசுவாசத்தைக் குறித்து எவ்வண்ணமாக வளர்த்து வருகிறேன்? என்ற கேள்விக்கு பதில் கொடுக்கிறவர்களாக இருக்க வேண்டும்.

## 2. அவநம்பிக்கையின் ஊழியம் கூடாது:

இந்த இருண்ட நாட்களில், சில போதகர்களின் மனப்பான்மையானது, தேவனுடைய மக்கள் ஒரு பெரிய எழுப்புதல் வரும் மட்டுமாக அல்லது தேவனுடைய வருகை மட்டுமாக எல்லாமே நம்பிக்கையற்றதாக இருக்கிறது என்று நினைக்கிற ஒரு தேவனற்ற சமுதாயத்தை, உருவாக்குகிறதாக இருக்கிறது. வருத்தமான உண்மை இப்படியாக இருந்தாலும், இவை மிகவும் கடினமான சூழ்நிலையில், அவருடைய வாக்குத்தத்தங்களினாலே

வல்லமையாய் கிரியை நடப்பிக்கவும், ஆத்துமாக்களை இரட்சிப்பதற்கும், வெளிப்படுத்தப்பட்ட தேவனுடைய கிருபையும், வல்லமையும் பொருத்தமற்றதாய் இருக்கிறது என்று எண்ணுவது. சபையின் விசுவாசத்தை அழிப்பதற்கு ஏதுவான அனைத்து அவநம்பிக்கைக்குரிய காரியங்களை நாம் கட்டாயமாக தவிர்க்க வேண்டும். நம்முடைய கடினமான சூழ்நிலையிலும், நம்முடைய முத்திரை மொழியானது "பாவம் பெருகின இடத்தில் கிருபை அதிகமாய் பெருகிற்று" என்று இருக்க வேண்டும்.

### 3. ஜெபக் கூடுகை:

நாம் ஏற்கனவே ஜெபத்தைக்குறித்து பார்த்திருக்கிறோம். மேலும், முக்கியமானது என்வென்றால், ஜெபத்திற்கு விசுவாசமானது, முன் நிபந்தனையாக மாத்திரமல்ல, அவற்றின் ஒரு கனியாகவும் இருக்கிறது என்று அறிந்து கொள்ளவேண்டும். தேவனுடைய வார்த்தையை கேட்பதற்கு அடுத்தபடியாக, பொறுமையோடு கூடிய உறுதியுள்ள ஜெபம் அதிமுக்கிய அம்சமாக இருக்கவேண்டும். ஜெபக் கூடுகைகளில் பங்குகொள்வதில், தனிநபர்களை உற்சாகப்படுத்தவும், இதுவே ஆசீர்வாதத்திற்கு ஏற்ற திறவுகோலாக இருக்கிறது என்றும் போதிக்க வேண்டும். அவ்விதமாக செய்யும்போது, தேவனுடைய கரத்தைப் பார்க்கமுடியும். விசுவாசமும் மேலோங்கி வளரும். அவர் யார் என்று நிரூபிப்பதற்கும், ஆசீர்வாதத்தை பெறுவதற்கும் ஜெபக்கூட்டமானது தேவனால் நியமிக்கப்பட்டதாக இருப்பதினால், சபையின் முன்னேற்றத்திற்கு தடையாக இருக்கிற எதுவாக இருந்தாலும் அல்லது எவ்வளவு பெரிய பாடுகளாக இருந்தாலும், அவைகள் எல்லாவற்றையும் உடனடியாக நேராக ஜெபத்தில் கொண்டுவர விழிப்பாக இரு.

### 4. நிதானமான எச்சரிப்புகள்:

தேவ அதிகாரத்தில் ஆரம்பத்தில் சொல்லப்பட்ட நவீன முறைகளும், தந்திரங்களையும் குறித்து எச்சரி. ஆனால் ஒருபோதும் மனதை புண்படுத்தும் விதத்திலோ, பெருமிதமாகவோ அல்லது சண்டையிடும் விதத்திலோ எச்சரிக்காதே. மக்கள் கேட்காமலேயே போகும்படியாகவும் அல்லது கவனமாய் எச்சரிப்புகளை எடுத்துக் கொள்ளாமலேயே போகும்படியாக, அடிக்கடி இதை செய்யாதே. ஆனால், ஒரு ஆசிரியனாக, தெளிவாக, ஆத்துமாக்கள் பேரில் வாஞ்சை கொண்டவனாக, தேவனுடைய வழிகளை பாதுகாத்தவனாக, இவ்விதமான தந்திரங்கள் எங்குபோய் எல்லாம் முடியும் என்றும், ஏன் இவ்வளவு முக்கியம் என்றும் விளக்குகிறவனாய் இருக்கவேண்டும். இவைகள், தேவனிடத்தில் உள்ள விசுவாசத்தைக் குறைத்துப்போடுகிறதாக இருப்பதினால், நம்முடைய மக்கள் அவைகளைக் குறித்து தெளிவாக அறிந்து கொள்ளவேண்டும்.

### 5. சரிசமமான அளவைக் கடைபிடித்தல்:

ஒரு உண்மையான திருச்சபையில் கூட சில சமயங்களில் விசுவாசிகளுடைய நடவடிக்கைகள், செயல்பாடுகள், தேவன் பேரில் உள்ள நம்பிக்கைக்கும், உலகத்தின் பேரில் உள்ள நம்பிக்கைக்கும் உள்ள அளவுகோலைச் சார்ந்திருகிறது. வெற்றியானது இவ்விதமான அளவுகோலை பொறுத்துக் காணப்பட்டாலும், சில நேரங்களில், வாலிபப் பிள்ளைகளிடத்தில் காணப்படுகிற பொழுதுபோக்கு, விளையாட்டு, உல்லாச சுற்றுலா போன்றவைகள் சுலபமாக அளவுக்கு அதிகமாகிவிடும்.

போதனையில் பயன்படுத்துகிற படக்காட்சிகள், நியாயமான விதத்தில் அவ்வப்பொழுது பயன்படுத்துகிற காணொளிகள் (Videos), உதவுகிற மற்றவைகள், இவையெல்லாம் சுலபமாக அதிகமாகிவிடும்.

அதெல்லாம் நல்லதுதான் ஆனால், அளவுக் கோட்டை தாண்டிவிடுகிறோமா? அதிசயதக்கதான தொழில் நுட்பமுறைகள் தேவனுடைய ஆசீர்வாதத்திற்கு கீழாக, நம்முடைய விசுவாசத்தை குலைத்துப்போடுகிறதாக இருக்கிறதா? ஆம்! நமக்கு ஆவிக்குரிய வாழ்வில் உதவியாக இருக்கும் அனைத்தும் நமக்கு அருகில் வைத்துக் கொள்கிறவர்களாக, தேவனுடைய வல்லமையை சார்ந்து சத்தியத்தை பறைசாற்றுவதில் உறுதியாய் இருக்கவேண்டும். எல்லாவித முயற்சியோடும், மிகுந்த வைராக்கியத்தோடும் நம்முடைய விசுவாசத்தை பாதுகாத்துக் கொள்ளவேண்டும். ஒரே நேரத்தில் அறிவை உணர்த்துகிற மென்மையான தலைமைத்துவம் நமக்கு அடிக்கடி தேவை.

தேவனுடைய ஆசீர்வாதத்தினால், சபை விசுவாசத்தின் இலக்கை அடையலாம். தேவனில் வைக்கும் உறுதியான நம்பிக்கையானது, நம்முடைய சபையை உருவாக்குகிற ஒன்றாய் இருக்கிறதைத் தெளிவாக அறிந்து கொள்ளலாம். தெளிவான பாதையான தேவனுடைய முறையில் நம்முடைய சபையானது விசுவாசிக்கிற சபையாகவும், ஸ்திரப்பட்டதாகவும், வேரூன்றப்பட்டதாகவும் இருக்கும். கடந்த வருடங்களில் பழமைவாதிய கொள்கையில், வழிகளில் உறுதியாக நின்ற நமக்குத் தெரிந்த ஒரு நபரை நாம் சந்திக்கக் கூடும். இருந்தபோதிலும், காலம் செல்ல செல்ல இந்நபர் சிரித்துக்கொண்டே சொல்லப்போனால் பெருமிதத்தன்மையோடு நான் வழக்கமாய் இருந்ததை விட இப்பொழுது விசாலமான மனதை கொண்டவனாய் இருக்கிறேன் என்பார். இதிலிருந்து என்ன தெரிகிறது என்னவென்றால், வேதரீதியான நம்பிக்கையை விட்டு விட்டு, உலக கிறிஸ்தவர்களுடைய முன்னோடியான எண்ணங்களுக்கு உடந்தையாகிவிட்டதை நாம் அறிந்து கொள்ளலாம். இதே வழியில் சென்ற மற்றொரு நபரும் வருத்தத்தோடு சொல்வது, போராடிய களைப்பு கொண்டவனாகி, ஆதலால்

சிறிய மனசாட்சி முன்பாகக் கூட கிறிஸ்தவ அன்பையும், சுதந்திரத்தையும் வைக்க கற்றுக் கொண்டதையும் சொன்னார்.

அநேக கிறிஸ்தவர்கள், தேவனுடைய வல்லமையை நம்புவதற்கு நவீனமயமான, மாற்று வழிகளுக்கு தங்களை ஒப்புக்கொடுக்க இணங்கிவிடுகின்றனர். நாம் சபை தலைவர்களாக இருப்போம் என்றால், தேவனுக்காக நம்முடைய மக்களை பாதுகாப்பதில் உடனடியாக, ஒப்புக்கொடுத்த மனதோடு, கடமையாற்ற வேண்டும். "கர்த்தர்தாமே உனக்கு முன்பாகப் போகிறவர், அவர் உன்னோடே இருப்பார்; அவர் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை; நீ பயப்படவும் கலங்கவும் வேண்டாம்" (உபா 31:8) என்ற வாக்குத்தத்தத்தின் அடிப்படையில், தேவனுடைய வழியில், சத்தியத்திற்கு உறுதி பூண்டு, ஸ்திரமான, உண்மையான, தடுமாற்றமில்லாத, எடுத்துக்காட்டுள்ள விசுவாசிக்கிற சபையாக, தேவன் தாமே நம்முடைய ஊழியங்களில் அமைந்திட உதவி செய்வாராக. 1தீமோ 1:5 -ல் சபை வாழ்வுக்குரிய உன்னத தன்மையான விசுவாசத்தை தெளிவாக காணமுடிகிறது.

**முடிப்பதற்கு ஒரு அழகான சான்று:**

"கற்பனையின் பொருள் என்னவெனில், சுத்தமான இருதயத்திலும், நல மனசாட்சியிலும், மாயமற்ற விசுவாசத்திலும் பிறக்கும் அன்பே".

**அப்போஸ்தலனை பின்பற்றி செயல்படுவது:**

"நீயோ என்... நோக்கத்தையும்.... நன்றாய் அறிந்திருக்கிறாய்" (2 தீமோ 3:10).

இதை பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதுகிறார். அதாவது, சபையை கட்டுவதற்கும், நிலைநாட்டுவதற்கும் உண்டான அவருடைய கொள்கை அல்லது வரைபடம்

இந்த அதிகாரங்களில் சுருக்கமாக கூறப்பட்டுள்ள பத்துக் கொள்கைகள், அவருடைய நிருபங்களில் காண்பிக்கப்பட்ட அநேக சான்றுகளில் இருந்து பவுலினுடையதாக இவைகள் தெளிவாக காண்பிக்கப்பட்டுள்ளது. ஆனால், அநேக காரியங்கள் இங்கே குறிப்பிடப்படவில்லை. ஆக, ஒட்டுமொத்தமாக இவைகள் காண்பிக்கிறது என்னவெனில், இந்த பத்துக் கொள்கைகள், அப்போஸ்தலனில் தனிப்பட்ட செயல்முறைத் திட்டத்தில், பிரதானமான அம்சமும், முன்னுரிமையுமாக இருந்தது என்று நாம் பார்க்கிறோம்.

இந்த பெரிதான நோக்கத்துடன், பின்பற்றுவதற்கு கட்டளையிடப்பட்ட அப்போஸ்தல மாதிரியின் ஒரு பகுதியாகவும், தேவனால் கொடுக்கப்பட்டதாகவும் இருப்பதினால், நாம் பாதுகாப்பாக இருக்கிறோம். பவுல் சொல்லுகிறார், “சகோதரரே, நீங்கள் என்னோடேகூடப் பின்பற்றுகிறவர்களாகி, நாங்கள் உங்களுக்கு வழிகாட்டுகிறபடி நடக்கிறவர்களை மாதிரியாக நோக்குங்கள்”(பிலி *3:17)* என்றும் மேலும் அவர், “நீங்கள் என்னிடத்தில் கற்றும் அடைந்தும் கேட்டும் கண்டும் இருக்கிறவைகளெவைகளோ, அவைகளையே செய்யுங்கள்; அப்பொழுது சமாதானத்தின் தேவன் உங்களோடிருப்பார்”(பிலி *4:7)* என்று எழுதுகிறார்.

தேவன் நிச்சயமாக நம்மோடு கூட இருப்பார். சாதாரண மனிதர்களால் உருவாக்கப்பட்ட திட்டங்களும், கொள்கைகளும், தந்திரங்களும் அது எவ்வளவுதான் சிறப்பாக காணப்பட்டாலும் முடிவில் ஏமாற்றமும், அழிவையும் தான் கொண்டுவரும். ஆனால், தவறிழைக்காத தேவனுடைய வார்த்தையிலிருந்து பெறப்படும் நம்முடைய திட்டங்களும், நோக்கங்களும் தேவனுடைய வாக்குத்தத்தங்களுக்கு கீழாக நிச்சயமாக நம்மைக் கொண்டு வருகிறதாகவும், தேவ

ஆவியானவர் நம்மேல் வல்லமையாக தங்குகிறவராகவும், உண்மையான இரட்சிப்புகளையும், நேர்மையான இருதயங்களையும் மற்றும் நீதியின் கனிகள் அனைத்தையும் கொண்டுவருகிறதாகவும் இருக்கிறது.

# குறிப்புகள்

டாக்டர். பீட்டர் மாஸ்டர்ஸ் இங்கிலாந்து தேசம் லண்டன் மாநகரத்தில், மெட்ரோபாலிட்டன் டேபர்னேக்கில் என்ற சீர்திருத்த பாப்திஸ்து சபையின் போதகராக 1970-ஆம் ஆண்டு முதல் கர்த்தருக்கென்று பணி செய்து வருகிறார்.இந்த சபையானது பிரசங்கிகளின் இளவரசன் என்றழைக்கப்படும் சி.எச். ஸ்பர்ஜன் என்ற தேவ மனிதரால் ஆரம்பிக்கப்பட்டது.





டாக்டர். பீட்டர் மாஸ்டர்ஸ் எழுதியிருக்கிற அநேக நல்ல ஆவிக்குரிய புத்தகங்கள் உலகத்தின் பல மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டு இன்றும் அநேகருக்கு ஆசீர்வாதமாக இருந்து வருகிறது.

நல்ல ஒரு ஆவிக்குரிய திருச்சபையின் வளர்ச்சிக்கு பவுலின் இந்த பத்துக் கொள்கைகள் மிக அவசியம் என்பதை இந்நூலின் ஆசிரியர் மிகத் தெளிவாகவும் அழகாகவும் விளக்கப்படுத்தியுள்ளார். திருச்சபையின் ஒவ்வொரு விசுவாசியும் வாசிக்க வேண்டிய புத்தகம் இது.


## சீர்திருத்த பாப்திஸ்து சபை

5/295, சாந்தி நகர், ஏற்காடு மெயின் ரோடு, சேலம் – 636 008

தொடர்பு எண் : +91 98427 67184

Website : www.reformedbaptistchurch.in

www.tamilchristianmessages.com